உ

குருபாதம்

# ஞானசம்பந்தம்

தருமையாதீனத் திங்கள் இதழ்

மலர் 24] விசவாவசு ஆண்டு சித்திரைத்திங்கள் 10—5—65 [இதழ்

ஸ்ரீ குருஞானசம்பந்தர் திருமுன்



புலியும் பசுவும் ஒருதுறையில் நீருண்ணல்



ஸ்ரீ குருஞானசம்பந்த சுவாமிகள்

உ

குருபாதம்

## ஸ்ரீ குருஞானசம்பந்தர்

## அருள்வாக்கு

தேசு செறிகமலைச்
 செங்கமலப் பொற்பாதன்
பேசுதமிழ் ஞானப்
 பிரகாசன்—பாசவினை
வாட்டினான் மீட்டுநான்
 வாரா வகையருளைக்
காட்டினான் கூட்டினான்
 காண். (29)

ஆசிரியர் :-

வித்துவான்,
சோமசுந்தரத் தம்பிரான்
சுவாமிகள்

துணையாசிரியர் :-

வித்துவான்,
சி. அருணைவடிவேல் முதலியார்,

குருபாதம்

# “ஞானசம்பந்[தம்]”

தருமையாதீனத் திங்க[ள்] இதழ்

மலர் 24 | 10-5-65 | இதழ் 6

## உட்பொருள்


| எண் | | பக்கம் |
|---|---|---|
| 1 | ஸ்ரீ ஞானம்பிகா சமேத ஸ்ரீ ஞானபுரீசுவரசுவாமி மகோற்சவப் பத்திரிகை | i |
| 2 | அருளுருவம் ... | 321 |
| 3 | ஸ்ரீலஸ்ரீ கயிலைக்குருமணி அவர்கள் அருளுரை ... | 327 |
| 4 | சித்தாந்த வினாவிடை ... | 337 |
| 5 | நெஞ்சே வாழ்த்து ... | 342 |
| 6 | சிவாகமத் தெளிவு ... | 346 |
| 7 | தமிழ் கூறு நல்லுலகம் ... | 350 |
| 8 | செய்திகள் ... | 354 |
| 9 | எதிர்காலம் ... | 365 |
| 10 | Extract from the Visitors' Book | 335, 345 |


அண்ணல் ஆலவாய்
 நண்ணி னான்றனை
எண்ணி யேதொழத்
 திண்ணம் இன்பமே.

— சம்பந்தர்.

உ

குருபாதம்

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனம்

ஸ்ரீ ஞானம்பிகா சமேத ஸ்ரீ ஞானபுரீசுவரசுவாமி கோயில்

# மகோற்சவப் பத்திரிகை



12—5—65 முதல் :: 22—5—65 முடிய

## திருநெறிய தெய்வத்தமிழ் மாநாடு

நாள்தோறும் மாலை 6 மணி முதல் நடைபெறும்.

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

குருபாதம்

## சிவபெருமான்

சீர்கொண்ட ஆனந்தமாகி எங்கும்
செறிவாகிப் பரமாகித் திறம தாகி
ஏர்கொண்ட கருணைத்திரு வுருவ மாகி
எழில்கொண்ட மலைமகளை இடத்திற் கொண்டோன்
கார்கொண்ட நிறங்கொண்ட முகுந்த னுதிக்
கடவுளர்வந் தடிபரவும் கடவுள் கொன்றைத்
தார்கொண்ட முடியனவன் அடியைத்தாழ்ந்து
தாழாத பெருங்கதியில் வாழா நிற்பாம்.

தருமையாதீனக் குருமுதல்வர்

## ஸ்ரீலஸ்ரீ குருஞானசம்பந்த சுவாமிகள்

சீரணியும் நுதலின்விழி மழுமான் நாகம்
திருந்தும்ளரி பொருந்துவிடம் தெரிந்திடாமல்
தாரணி அன்பரையாள அவர்போல் வந்த
சைவசிகா மணிஎவர்க்கும் தலைவன் எங்கோன்
காரணியும் நெடியபொழிற் கமலை வேந்தன்
கருணைமழை பொழியும் இரு கடைக்க ணுளன்
பார்புகழும் ஞானசம் பந்தன் எந்தை
பரமன்இரு சரணமலர் பரவி வாழ்வாம்.

(சம்பந்த சரணலயர்)



உ

சிவமயம்

## ஸ்ரீ ஞானம்பிகா சமேத ஸ்ரீ ஞானபுரீசுவரசுவாமி கோயில்

# மகோற்சவப் பத்திரிகை.

பெருங்கருணைத் தடங்கடலாகிய சிவபெருமான் ஆன்மாக்கள் மீது வைத்த எல்லையிலாப் பெருங்கருணையினாலே, காணாத அருவினுக்கும் உருவினுக்கும் காரணமாய் நிகழ் குறியாம் சிவலிங்கமாதி திருவுருக்கொண்டு எழுந்தருளியிருக்கின்ற தலங்கள் பலவற்றுள் இந்திரன், அகத்தியர், தருமன் ஆகியோர்களால் பூசிக்கப்பெற்றதும் காவிரி முதலிய தீர்த்தங்களால சிறப்புற்றதும், வில்வாரண்யம் என்னும் சிறப்புத் திருநாமம் உற்றதும், குருபீட ஸ்தானமும் ஆகிய தருமபுரத்தின்கண் திருக்கோயில்கொண்டு எழுந்தருளியிருக்கின்ற ஸ்ரீஞானம்பிகா சமேத ஸ்ரீஞானபுரீசுவர சுவாமிக்கு நிகழும் விசுவாவசு ஆண்டு சித்திரைத் திங்கள் 30-வது நாள் (12—5—1965) புதன்கிழமை தொடங்கி மகோற்சவம் நடைபெறும்.

திருநாட்களில் திருநெறிய தெய்வத் தமிழ் மாநாடும் இன்னிசை நிகழ்ச்சிகளும் நடைபெறும். சிவநேசச் செல்வர்கள் யாவரும் வந்திருந்து திருவிழாக்காட்சியைத் தினமும் தரிசித்தும் சொற்பொழிவுகளைக் கேட்டும் இன்புறுக.

தருமையாதீன
மடாலயம்,
விசுவாவசு-சித்திரை

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனம்
கார்பார்,

**சொக்கநாதத் தம்பிரான்.**

---

**ஆதீன மடாலயத் திருநெறிய தெய்வத்தமிழ்மன்றத்தில் நாள்தோறும் மாலை 6-மணி முதல் மாநாட்டு நிகழ்ச்சிகளும் பூசைமடத்தில் காலை 10-30 மணிமுதல் சிவஞானசித்தியார் பாட வகுப்பும் நடைபெறும்**

உ

# திருநாள் விபரம்.

| | தமிழ் ௵ ௴ ௳ | இங்கிலீஷ் ௵ ௴ ௳ | வாரம் | திரு நாள் | உற்சவ விபரம் |
|---|---|---|---|---|---|
| சித்திரை | 29 | 11—5—65 | மங்களவாரம் | | உத்திர நக்ஷத்திரம் கூடிய சுபதினத்தில் உதயாதி 31-15 நாழிகைக்கு மேல் 36-30 நாழிகைக்குள் (இரவு மணி 6-30 to 8-30க்குள்) விருச்சிக லக்னத்தில் அனுக்ஞை விக்னேசுவரபூஜை, வாஸ்துசாந்தி, மிருத்ஸங்கிரஹணம், அங்குரார்ப்பணம், ரக்ஷாபந்தனம். |
| | 30 | 12—5—65 | புதவாரம் | 1 | ஹஸ்த நக்ஷத்திரம் கூடிய சுபதினத்தில் உதயாதி 4-50 நாழிகைக்குமேல் 9-45 நாழிகைக்குள் (காலை மணி 7-50க்குமேல் 9-45க்குள்) மிதுன லக்னத்தில் ஸ்ரீ ஞானம்பிகா சமேத ஸ்ரீ ஞானபுரீஸ்வர சுவாமி மஹோத்ஸவ துவஜாரோகணம். |
| | 31 | 13—5—65 | குருவாரம் | 2 | கற்பகவிருக்ஷக் காட்சி. |
| | 1 | 14—5—65 | சுக்கிரவாரம் | 3 | பூதம், பூதகி, இடும்ப வாகனக் காட்சி. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| வைகாசிமீ | 2 | 15—5—65 | ஸ்திரவாரம் | 4 | நந்தி, காமதேனு, குதிரைவாகனக் காட்சி. |
| | 3 | 16—5—65 | பானுவாரம் | 5 | சகோபுர ரிஷப வாகனக் காட்சி. |
| | 4 | 17—5—65 | சோமவாரம் | 6 | யானை, அன்னம், ஆட்டுக்கடா வாகனக்காட்சி |
| | 5 | 18—5—65 | மங்களவாரம் | 7 | இரவு மணி 8-15க்கு தனுர் லக்னத்தில் திருக் கல்யாண வைபவம், புஷ்பவிமானம் வெள்ளி ரதக் காட்சி. |
| | 6 | 19—5—65 | புதவாரம் | 8 | குதிரை, கிளி, யானைவாகனக் காட்சி. |
| விசுவாவசுஞு | 7 | 20—5—65 | குருவாரம் | 9 | காலை மணி 7-45க்கு மேல் 9-0க்குள் மிதுன லக்னத்தில் மஹா ரதாரோஹணம், திருத்தேர். |
| | 8 | 21—5—65 | சுக்கிரவாரம் | 10 | காலை ஸ்ரீ சபாநாயகர் தீர்த்தம் கொடுத்தருளல் பிறகு பஞ்சமூர்த்திகளும் ரிஷபாரூடராய் எழுந்தருளிக் காவிரியில் தீர்த்தங் கொடுத் தருளல், இரவு துவஜாவரோஹணம். |
| | 9 | 22—5—65 | ஸ்திரவாரம் | | மௌன உற்சவம். |
| | 10 | 23—5—65 | பானுவாரம் | | சண்டேசுரர் உற்சவம். |

உ

குருபாதம்

# நிகழ்ச்சிகள்

ஒவ்வொருநாளும் மாலை 6 மணி முதல் நடைபெறும்

**முதல் திருநாள்** 12—5—65 புதன்கிழமை

## திருஞானசம்பந்தர் திருநாள்

**தொடக்கவுரை :-**

**கனம். திரு. A. S. காங்கேயம் பிள்ளை**
புதுவை மாநில அமைச்சர், பாண்டிச்சேரி.

**வித்துவான். ஸ்ரீமத். சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள்,**
தருமையாதீன சமயப்பிரசார நிலையம், சென்னை.
"முதல் திருமுறை"

பல்கலைச்செல்வர்
**திரு. தெ. பொ. மீனாக்ஷிசுந்தரனார், M. A, B. L., M. O. L.**
மொழியாராய்ச்சித்துறைத் தலைவர், அண்ணாமலைப் பல்கலைக் கழகம்.
"ஆளுடைய பிள்ளையார்"

**பண்டித, வித்துவான். திரு. கு. சுந்தரமூர்த்தி**
தமிழ்ப்பேராசிரியர், செந்தமிழ்க்கல்லூரி, திருப்பனந்தாள்.
"உந்திகளிறு"

**கதாகாலக்ஷேபம்**
"இசைவாணி"
**திருமதி. T. S. விமலகுமாரி குழுவினர்,**
தஞ்சாவூர்.
"வள்ளித் திருமணம்"

இரண்டாந் திருநாள் 13—5—65 வியாழக்கிழமை

## திருநாவுக்கரசர் திருநாள்

தொடக்கவுரை :-

திரு. N. மகாலிங்கம், B. Sc., M. I. E., M. L. A.
பொள்ளாச்சி.

வித்துவான். திரு. க. வெள்ளைவாரணனர்
ஆராய்ச்சித்துறைத் துணைப்பேராசிரியர், அண்ணுமலைப்
பல்கலைக் கழகம்.

"இரண்டாந் திருமுறை"

செந்தமிழ்ச்செம்மல்
திரு. அ. சீநிவாசராகவன், M. A.,
முதல்வர், வ. உ. சி. கல்லூரி, தூத்துக்குடி.

"ஆளுடைய அரசுகள்"

திரு. T. K. சுப்பிரமணிய பிள்ளை, B. A., B. L.
அட்வகேட், சென்னை.

"சிவஞானபோதம்"

## வில்லுப்பாட்டு

"வில்லிசை அரசு"

திரு. கே. சி. சுவாமிநாதன் குழுவினர்
சென்னை.

"திருஞானசம்பந்தர்"

மூன்ருந் திருநாள் 14—5—65 வெள்ளிக்கிழமை

## சுந்தரர் திருநாள்

தொடக்கவுரை :-

திரு. M. S. சாரங்கபாணி முதலியார், B. A., B. L.,
இந்து சமய அறநிலையத்துறை ஆணையர், சென்னை.

செஞ்சொற்கொண்டல்

வித்துவான். திரு. சொ. சிங்காரவேலனுர், M. A.,

ஆய்வாளர், மொழியாராய்ச்சித்துறை, அண்ணுமலைப்பல்கலைக்கழகம்

" மூன்ருந் திருமுறை "

சைவ இலக்கியப் பேரறிஞர், வித்துவான்.

டாக்டர். திரு. மா. இராசமாணிக்கனுர், M. A., L. T., M. O. L., Ph. D

சென்னைப் பல்கலைக் கழகம்.

" ஆளுடைய நம்பிகள் "

பாலூர், திரு. து. கண்ணப்ப முதலியார் M. A., B. O. L.,

தமிழ்த்துறைத் தலைவர், புதுக்கல்லூரி, சென்னை.

" சிவஞானசித்தியார் "

## திருமுறை இன்னிசையரங்கு

சங்கீதபூஷணம், திரு. P. சுவாமிநாதன்

தேவார இசைமணி, திரு. S. திருஞானசம்பந்தம்

நான்காம் திருநாள் 15—5—65 சனிக்கிழமை

## மாணிக்கவாசகர் திருநாள்

தொடக்கவுரை :-

கனம். திரு. R. சதாசிவம், B. A.. M, L.

உயர்நீதிமன்ற நீதிபதி, சென்னை.

வித்துவான். ஸ்ரீமத். இராமலிங்கத் தம்பிரான் சுவாமிகள்

கட்டளை விசாரணை, வேளூர் தேவஸ்தானம்.

" நான்காம் திருமுறை "

திருமதி. ஜெயகுமாரி பாஸ்கரன்

சென்னை.

" ஆளுடைய அடிகள் "

சித்தாந்தப் புலவர்மணி
திரு. ந. இரா. முருகவேள், M. A., M. O. L.
ஆசிரியர், "திருக்கோயில்" சென்னை.

"இருபா இருபஃது"

## இன்னிசையரங்கு

அண்ணாமலைப் பல்கலைக் கழக இசைக் கல்லூரி முதல்வர்,
தருமையாதீன இசைப்புலவர், இசையரசு,
திரு. M. M. தண்டபாணி தேசிகர் குழுவினர்.

ஐந்தாம் திருநாள் 16—5—65 ஞாயிற்றுக்கிழமை

## மெய்கண்டார் திருநாள்

தொடக்கவுரை :-

டாக்டர், திரு. K. அரங்கசாமி பிள்ளை, M. B. B. S.
சிதம்பரம்.

வித்துவான். திருமதி. ப. நீலா
தமிழ்ப் பேராசிரியை, தருமையாதீனப் பல்கலைக் கல்லூரி.

"ஐந்தாம் திருமுறை"

திரு. அ. ச. ஞானசம்பந்தம் M. A.,
சென்னை.

"மெய்கண்ட சிவம்"

"பைந்தமிழ்ச் செல்வர்"
திரு. ச. சிவகுமாரன் M. A.,
சென்னை.

"உண்மை விளக்கம்"

## இன்னிசையரங்கு

திருமதி. சேலம். ஜெயலெட்சுமி குழுவினர்

ஆறாம் திருநாள் 17—5—65 திங்கட்கிழமை

## அருணந்திசிவாசாரியர் திருநாள்

தொடக்கவுரை :-

கனம். திரு. வி. வேங்கடசுப்பா ரெட்டியார்
புதுவை மாநில முதலமைச்சர், பாண்டிச்சேரி.

வித்துவான். ஸ்ரீமத். சுவாமிநாதத் தம்பிரான் சுவாமிகள்
கட்டளை விசாரணை, திருநள்ளாறு தேவஸ்தானம்.

" ஆரூர் திருமுறை "

வித்துவான், திரு. ஜி. சுப்பிரமணிய பிள்ளை M. A., B. L.,
தமிழ் ஆராய்ச்சித்துறைத் தலைவர், அண்ணுமலைப் பல்கலைக் கழகம்.

" அருணந்திசிவம் "

வித்துவான். திரு. வி. சா. குருசாமி தேசிகர்
முதல்வர் பொறுப்பு, தருமையாதீனப் பல்கலைக் கல்லூரி.

" சிவப்பிரகாசம் "

### கதாகாலக்ஷேபம்

தருமையாதீன வித்துவான், சங்கீத சாகித்யவல்லப,
கீர்த்தனகுலசேகர, எம்பார்,
ஸ்ரீமத். விஜயராகவாச்சாரியார் குழுவினர்
ஸ்ரீரங்கம்.

" சுந்தரர் "

ஏழாம் திருநாள் 18—5—65 செவ்வாய்க்கிழமை

## மறைஞானசம்பந்தர் திருநாள்

தொடக்கவுரை :-

கனம். திரு. ப. சண்முகம்
புதுவை மாநில அமைச்சர், பாண்டிச்சேரி.

செந்தமிழ்ச் செல்வர்,

வித்துவான், திரு. கி. வா. ஜகந்நாதன் M. A.,

ஆசிரியர், "கலைமகள்" சென்னை.

"ஏழாந் திருமுறை"

திரு. பி. ஆர். சுவாமிநாதன் M. A., L. T.,

தலைமை ஆசிரியர், ஆர். சி. டி. உயர்நிலைப்பள்ளி, சிதம்பரம்.

"மறைஞானசம்பந்த சிவம்"

தருமையாதினப் புலவர், பண்டித, வித்துவான்,

திரு. இராம. கோவிந்தசாமி பிள்ளை

திருவையாறு.

"திருவருட்பயன்"

கதாகாலக்ஷேபம்

குமாரி. கௌரி குழுவினர்

சென்னை.

"குருஞானசம்பந்தர்"

எட்டாந் திருநாள் 19—5—65 புதன்கிழமை

உமாபதிசிவாசாரியர் திருநாள்

தொடக்கவுரை :-

திரு. எஸ். சென்னியப்ப முதலியார்

பாண்டிச்சேரி.

திருவாசகமணி,

திரு. கே. எம். பாலசுப்பிரமணியம், B. A., B. L.

திருச்சிராப்பள்ளி.

"எட்டாந் திருமுறை"

தருமையாதீனப்புலவர், பாலகவி, வயினாகரம்,
திரு. வே. இராமநாதன் செட்டியார்
தேவகோட்டை.

" வினு வெண்பா "

வித்துவான். திரு. அ. நடேச முதலியார்
தமிழ் விரிவுரையாளர், அண்ணுமலைப் பல்கலைக்கழகம்.

" உமாபதி சிவம் "

## இன்னிசையரங்கு

திருமதி. கே. வசந்தா குழுவினர்
தஞ்சாவூர்,

ஒன்பதாம் திருநாள் 20—5—65 வியாழக்கிழமை

## கமலை ஞானப்பிரகாசர் திருநாள்

தொடக்கவுரை:-

திரு. V. சந்தானம்
பொறுப்பாசிரியர் 'தினமணி' மதுரை.

வித்துவான், ஸ்ரீமத். மகாலிங்கத்தம்பிரான் சுவாமிகள்
இராஜன்கட்டளை, கட்டளை விசாரணை, திருவாரூர்.

" ஒன்பதாம் திருமுறை "

தருமையாதீனப் புலவர்
வித்துவான், திரு. வை. குஞ்சிதபாதம் பிள்ளை
தமிழாசிரியர், நகராண்மைக்கழக உயர்நிலைப்பள்ளி, சென்னை.

" போற்றிகொடி "

திரு. K. கமலக்கண்ணன் A. M. I. S. E., M. L. C.
சென்னை.

" கமலை ஞானப்பிரகாசர் "

இன்னிசைக் கதை

திரு. கொத்தமங்கலம் சுப்பு குழுவினர்
சென்னை.

" திருநாவுக்கரசர் "

பத்தாம் திருநாள் 21—5—65 வெள்ளிக்கிழமை

குருஞானசம்பந்தர் திருநாள்

காலை 8-30 மணி முதல்

தொடக்கவுரை:-

கனம். திரு. K. S. வேங்கடராமன் I. C. S.,
உயர்நீதிமன்ற நீதிபதி, சென்னை,

திருமுருக, கிருபானந்தவாரியார்
சென்னை,

" திருமூலர் "

மாலை 4-30 மணி முதல்

திருக்குறள்வேள்
திரு. G. வரதராஜ பிள்ளை B. A.,
திருச்சிராப்பள்ளி.

" பத்தாம் திருமுறை "

திரு. டி. புருஷோத்தமன் Ex. M. L. C.,
சென்னை.

" குருஞானசம்பந்தர் "

கல்வெட்டாராய்ச்சிக் கலைஞர்,
வித்துவான். திரு. வை. சுந்தரேச வாண்டையார்
தருமையாதீன நூல்நிலையக் காப்பாளர்.

" நெஞ்சுவிடு தூது "

21—5—65 வெள்ளிக்கிழமை

ஸ்ரீலஸ்ரீ குருஞானசம்பந்த தேசிக பரமாசாரிய
சுவாமிகள்

# குருபூஜை விழா

காலை 10 மணிக்கு மேல்

## ஸ்ரீ சொக்கலிங்கப்பெருமானை வழிபடுதல்

விழா மலர்:

## தாயுமானவர் பாடல்

மாலையில்

கனகாபிஷேகம் கொண்டருளிய
ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்கள்
காவிரித் திருமஞ்சனத்திற்கு எழுந்தருளிக் குருமூர்த்த
வழிபாடு செய்தருளல்

பட்டணப் பிரவேசத் திருநாள்  22—5—65 சனிக்கிழமை

## ஆனந்தபரவசர் திருநாள்

காலை 8-30 மணி முதல்

தொடக்கவுரை:-

திரு. A. மார்க்கண்டவேல் ராஜன்
அறநிலையத்துறைத் துணை ஆணையர், தஞ்சாவூர்.

திரு. I. A. சிதம்பரம் பிள்ளை M. A., M. L. C.
இலஞ்சி,

" குருபக்தி "

தருமையாதீனப் புலவர்
வித்துவான், திரு. வை. மு. சண்முக தேசிகர்
தலைமைத் தமிழாசிரியர், தேசிய உயர்நிலைப்பள்ளி, நாகப்பட்டினம்.

" பதினொராந் திருமுறை "

வித்துவான். திரு. மா. ஆறுமுகம்
தமிழாசிரியர், கழக உயர்நிலைப்பள்ளி, பொன்விளைந்தகளத்தூர்.

" பதினொராந் திருமுறை ஆசிரியர்கள் "

பட்டணப்பிரவேசத் திருநாள்  22—5—65 சனிக்கிழமை

காலை 10-30 மணிக்குமேல்

## ஸ்ரீ சொக்கலிங்கப்பெருமானை வழிபடுதல்

பகல் 12 மணி முதல்

## மாகேஸ்வரபூஜை

மாலை 4-30 மணி முதல்

**வித்துவான். திரு. M. சுந்தரேசம் பிள்ளை**
**தமிழ்ப்பேராசிரியர், செந்தமிழ்க் கல்லூரி, திருப்பனந்தாள்.**

"பன்னிரண்டாம் திருமுறை"

தருமையாதீனப் புலவர்,
**வித்துவான். திரு. சி. அருணைவடிவேல் முதலியார்**
**தமிழ்ப் பேராசிரியர், தருமையாதீனப் பல்கலைக் கல்லூரி.**

"உண்மைநெறி சங்கற்பம்"

**சிரோமணி, வித்துவான். திரு. வி. சபேசன்**
**தமிழ்ப் பேராசிரியர், தருமையாதீனப் பல்கலைக் கல்லூரி.**

"ஆனந்தபரவசர்"

## இன்னிசையரங்கு

ஏழிசைவல்லபி

## திருமதி. K. B. சுந்தராம்பாள் குழுவினர்

22—5—65 சனிக்கிழமை

இரவு

**பட்டணப்பிரவேசம்**

உ
குருபாதம்

# ஞானசம்பந்தம்

தருமையாதீனத் திங்கள் இதழ்

மலர் 24 ] - விசுவாவசு - சித்திரை - 10—5—65 [ இதழ் 6

திருச்சிற்றம்பலம்

பொன்றயங் கிலங்கொளிர் நலங்குளிர்ந்த புன்சடை
பின்றயங்க ஆடுவாய்! பிஞ்ஞகா! பிறப்பிலீ!
கொன்றையம் முடியினய்! கூடலால வாயிலாய்!
நின்றயங்கி யாடலே நினைப்பதே நியமமே. (சம்பந்தர்)

திருச்சிற்றம்பலம்

## அருளுருவம்

உலகில் நம்மால் அறியப்படும் பொருள்கள் 'காட்சிப் பொருள், கருத்துப் பொருள்' என இருவகைப்படும். காட்சிப் பொருள்கள் உருவம். கருத்துப் பொருள் அருவம். 'அருவம், உருவம்' என்ற இரண்டில் உருவமே நம்மைப் பெரிதும் கவர்கின்றது.

காளைப் பருவத்தினனாகிய தலைவன் ஒருவன், களிமயிற் சாயலுடையாளாகிய தலைவி ஒருத்தியைத் தனியிடத்திற் கண்டு,

"அணங்குகொல்! ஆய்மயில் கொல்லோ! கனங்குழை
மாதர்கொல்! மாலும்என் நெஞ்சு"

என்று மயங்கச் செய்வதும், அத்தலைவியது வடிவழகேயாம். தளர்நடையிட்டுத் தவழும் குழவியின் தோற்றத்தில் ஈடுபட்ட அறிவுடைநம்பி என்னும் பாண்டியப் பேரரசன் ஒருவன்,

"குறுகுறு நடந்து சிறுகை நீட்டி
இட்டும் தொட்டும் கௌவியும் துழந்தும்
நெய்யுடை அடிசில் மெய்பட விதிர்த்தும்
மயக்குறும் மக்கள்"

என்று பாடிய பாட்டொன்று புறநானூற்றில் இன்றும் நின்று நிலவுகின்றது.

உலகியலில் உள்ளவர்கள் உலகியல் உருவில் இவ்வாறு ஈடு படுதல்போல, அருளியலில் உள்ளவர்கள் அருளியல் உருவில் ஈடுபடுகின்றனர். மக்களது உள்ளத்திற்கு உள்ள இப்பான்மையை உணர்ந்து இறைவன், அவர்களை ஆட்கொள்ள வரும்பொழுது உருவத்திலே வருகின்றான்.

மூன்றாண்டு உடைய குழந்தையாகிய ஞானசம்பந்தரது உள்ளத்தை, சீகாழித் திருத்தோணிப்பெருமான் கவர்ந்ததும், 'தோடுடைய செவி, விடை ஊர்தி, தூய வெள்ளிய பிறைச் சூட்டு, சுடலைப் பொடிப் பூச்சு, முதலியவைகளைக் கொண்ட உருவத்தினாலன்றோ!

"கருமானின் உரியதளே உடையா வீக்கிக்
கனைகழல்கள் கலந்தொலிப்ப அனல்கையேந்தி
வருமானத் திரள்தோள்கள் மட்டித் தாட
வளர்மதியம் சடைக்கணிந்து மானேர் நோக்கி
அருமான வாள்முகத்தாள் அமர்ந்துகாண
அமரர்கணம் முடிவணங்க ஆடுகின்ற
பெருமான்"

என்று சொல்லித் தில்லைக் கூத்தப்பெருமானது நடனத்தில் ஈடுபடுகின்றார் திருநாவுக்கரசர்.

" காலையே போன்றிலங்கும் மேனி ; கடும்பகலின்
வேலையே போன்றிலங்கும் வெண்ணீறு - மாலையின்
தாங்குருவே போலும் சடைக்கற்றை மற்றவற்கு
வீங்கிருளே போலும் மிடறு "

என்று, இறைவன் திருமேனியின் எழிலைக் காரைக்காலம் மையார் வியந்துரைக்கும் அற்புதம், நமது உள்ளத்தை, 'காலை, நண்பகல், மாலை, இரவு' என்னும் எப்பொழுதி லும் இன்புறச் செய்கின்றது.

" உலகம் உவப்ப வலனேர்பு திரிதரு
பலர்புகழ் ஞாயிறு கடற்கண் டாஅங்கு
ஓவற இமைக்கும் சேண்விளங் கவிரொளி "

என்னும் திருமுருகாற்றுப்படையின் அடிகளும் அத்தகை யனவே.

இவ்வாறு இறைவன் உயிர்களின் பொருட்டுக் கொள் ளும் உருவங்கள் எல்லாம் அருளுருவங்களே. அதனால், அவ்வுருவங்களின் குறியாய்த் திருக்கோயிலில் அமைக்கப் பட்டுள்ள திருவுருவங்களும் அருளுருவங்களே. இது,

" மாயை காரிய உருக்களும் எம்பிரான் வடிவம்
ஆய வேல்அவை அருள்மயமாகும் "

என்று காஞ்சிப் புராணத்துள் நன்கு விளக்கப்பட்டது.

இறைவன் கொள்ளுகின்ற அளவற்ற வடிவங்களும், 'குரு, லிங்கம், சங்கமம்' என்னும் மூன்று வகையில் அமையும். குரு - ஆசாரிய மூர்த்தம். லிங்கம் - திருக் கோயிலில் உள்ள திருவுருவங்கள். சங்கமம் - அடியார்கள். 'இம்மூவகைத் திருமேனிகளிடத்தில் அன்புகொள்ளுதலே முத்திக்கு வழி' என்கின்றது, உண்மை விளக்கம் என்னும் நூல்.

'குரு, லிங்கம், சங்கமம்' என்னும் மூன்றில் குரு மூர்த்தமே தலையாயது; அதனால், அதுவே முதலில்

வைத்துச் சொல்லப்படுகின்றது. முத்திக்கு வழி, முதல்வனிடத்தில் கொள்ளும் அன்பு. அந்த அன்பு ஞானத்தினால் விளைவது. ஞானம், குருமூர்த்தியாலே தரப்படும். ஆகவே, ஆசான் மூர்த்தியாலே அனைவரும் பயன் பெறுதல்வேண்டும்.

ஆசான் மூர்த்தி யின்றியே இறைவன் நேராக அருள் செய்வது ஒருசிலர்க்கேயாகும். அவன் குருமூர்த்தியாக வந்து அருள்செய்வதே மிகுதியாய் நிகழ்வது. ஏனெனில், உண்மைப் பொருளைச் சொல்வடிவில் ஒரு சொல்லால் தொகுத்தும் சில சொற்களால் வகுத்தும், பல சொற்களால் நூல் முதலியவற்றை விளக்கி விரித்தும் கூறினாலன்றி, மக்களுக்குத் தெளிவு உண்டாதல் இல்லை. ஆகையால், வினா விடைகளால் அவர்களோடு அளவளாவிச் சொல்லிக் காட்டுதல், சிலவற்றைச் செய்துகாட்டுதல் முதலியவை வேண்டப்படுகின்றன. அவை குருவாய் வந்தாலல்லது இயலா.

மேலும் இறைவன் தனது உண்மை வடிவில் தோன்றுவானாயின், மக்கள் அச்சம்கொள்வதன்றி, ஆர்வம் கொள்ளுதல் என்பது சிறுபான்மையேயாம். அதன் பொருட்டும் அவன் குருவாகியே வருகின்றான். இதுதான், ‘மானைக் காட்டி மானைப் பிடிப்பதுபோல’ என்று சொல்லப்படுகின்றது. இவைபற்றியே குருவடிவம் ஒன்றே ‘அருளுரு’ என்று சிறப்பித்துச் சொல்லப்பெறுகின்றது. இதனை, ‘திருவருட் பயன்’ என்னும் நூலின், ‘அருளுரு நிலை’ என்ற அதிகாரத்தின் பெயர்பற்றி அறியலாம்.

“ அருளா வகையால் அருள்புரிய வந்த
பொருள்ஆர் அறிவார் புவி ”

‘ பார்வைஎன மாக்களைமுன் பற்றிப் பிடித்தற்காம்
போர்வைஎனக் காணார் புவி ”

என்பவற்றால் அவ்வதிகாரத்தில் அருட்குரு மூர்த்தியின் பெருமை விளக்கப்படுகின்றது.

இறைவன், தான் அருள்செய்யாததுபோலச் செய்கின்ற நிலையை உலகத்தார் உணர்வதில்லை; அஃதாவது, இறைவன் தனது இயற்கை வடிவில் தோன்றிக் காட்சியளிக்காமல், குருமூர்த்தி வாயிலாக வந்து ஞானத்தை அருளும் நிலையை உலகத்தார் உணர்வதில்லை. எனவே குருமூர்த்திகளது வடிவமும், சொல்லும், செயலும் சிவத்தினது வடிவமும், சொல்லும், செயலுமன்றி வேறில்லை என்பதும், இவ்வுண்மையை உணர்தல் சத்திநிபாதர்க்கன்றி ஏனையோர்க்கு இயலாது என்பதும் விளங்கும்.

இன்னும் குருமூர்த்தியும் நம்மைப் போல மக்கட் கூட்டத்துள் ஒருவரே யாயினும், அவரை அங்ஙனம் நினையாது, மற்றைய விலங்குகளைத் தன் தலைவனிடத்தில் வந்து அடையச் செய்கின்ற பார்வை மிருகத்தைப்போல, ஏனைய மக்களை இறைவன்பால் அடையச் செய்கின்ற அருளுருவினராக அறிதல் வேண்டும். இதுவும், பொதுமக்கட்குக் கூடாததேயாம்.

இவ்வாற்ருல், நம் நாட்டில் உலகம் உய்யத் தோன்றி அருள்வாக்குக்களை அருளிச்செய்து சென்ற அருளாசிரியர்கள் சிறப்பாகச் சைவ சமயாசாரியர்கள், சந்தாஞசாரியர்கள் முதலியோர் அருளுருவத்தினரே என்பதிலும் அவர்கள் வாக்குக்கள் சிவ வாக்குக்களே என்பதிலும் சிறிதும் ஐயமின்று. ஆயினும், அவர்களையும், அவர்கள் வாக்குக்களையும் அவ்வாறு உணர ஒட்டாமல் தடுப்பது பாசத்தின் வலிமையேயாகும்.

சமயாசாரியர்களது அருளுருவங்களாக விளங்குவன திருமுறைகளே. சந்தாஞசாரியர்களது அருளுருவங்கள், அவர்கள் அருளிய சாத்திரங்களும், அவர்களது ஞான பரம்பரையில் வந்து ஞான பீடத்தில் எழுந்தருளியிருக்கும் குருமகாசந்நிதானங்களும். இவர்களது அருட்கோலுக் குருமூர்த்தத்திலே ஆதி பரமாசாரியர்களது அருளுருவத்தையும், காணலாகும். அத்தகைய ஞான பரம்பரைகள் நம் நாட்டின் ஞானக் கருவூலங்களாய்த் திகழ்கின்றன.

திருக்கயிலாய பரம்பரைத் தருமபுர ஆதீன ஆதி பரமாசாரிய மூர்த்திகளாகிய ஸ்ரீ குருஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகளது குருபூஜைத் திருநாள் மிக அண்மையில் நிகழ இருக்கின்றது. இவ்வாதீனத்தில் 25 ஆவது மகா சந்நிதானமாக இப்பொழுது எழுந்தருளியிருந்து அருட் செங்கோல் ஓச்சிவரும் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணியவர்கள் கயிலாய யாத்திரை செய்து கயிலையைத் தரிசித்து, திருக் கயிலாய பரம்பரையை நிதர்சனமாக விளங்கச் செய்தருளி யவர்கள். அவர்களது திருக்கண் பார்வையில் நிகழும் குருபூஜைவிழாச் சிறப்புக்களில் அன்பர் பலரும் அருளுருவக் காட்சிகளையும், அருள்ஞானச் செவிச் செல்வத்தையும், திருவருள் - குருவருள் பிரசாதத்தையும் பெற்று உய்யும் வாய்ப்பு நிரம்ப உள்ளது. அவ்வாய்ப்பினை அனைவரும் பெற்று மகிழ்வோமாக.

---

## EXTRACT FROM THE VISITORS' BOOK

Dharmapuram Adhinam

Sri Amirthagatesvaraswamy Devasthanam, Tirucadaiyur.

இன்று என் குழந்தைகளுடன் இத் திருத்தலத்துக்கு வந்து அமிர்தகடேசுவரரையும், காலசம்காரமூர்த்தியையும், அபிராமி அன்னையையும் தரிசிக்கும் பாக்கியம் பெற்றேன். பேருவகை கொண்டேன். கோயிலும் சுற்றுப்புறங்களும் மிகவும் சுத்தமான சூழ்நிலையில் உள்ளன. கோயில் அர்ச்சகர்கள் இதர பணியாளர் கள் யாவரும் தரிசனத்துக்கு மிகமிக உதவிபுரிகின்றனர். தல வரலாறு முதலிய விவரங்களை எடுத்துக்கூறினர். கோயிலில் நுழைந்ததிலிருந்து வெளியே வரும்வரை ஒவ்வொரு இடத்திலும் தருமையாதீனத்தின் நிர்வாகத் திறமை பரிமளிக்கிறது. கோபுர வாசலில் நுழைந்தவுடனேயே இக்கோயில் தருமையாதீனத்தின் கீழ் உள்ளது என்று தெள்ளெனத்தெரிகிறது. மீண்டும் மீண்டும் இக்கோயிலுக்கு வரும் பாக்கியமும் சந்தர்ப்பமும் பெற எல்லாம் வல்ல இறைவனையும் அபிராமி அம்மையையும் இறைஞ்சுகிறேன்.

இறை அன்பன்,

(ஒப்பம்) முத்துக்காமாட்சி

தஞ்சைமாவட்டக் கலெக்டரின் பஞ்சாயத்து உதவியாளர்

16—4—65

குருபாதம்

திருத்தருமையாதீனம் 25 ஆவது குருமகாசந்நிதானம்

ஸ்ரீலஸ்ரீ கயிலை சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் வழங்கியருளிய

# அருளுரை

## நிற்கும் நிலை

கூட்டுவதும் கூட்டிப் பிரிப்பதுவும் ஒன்றொன்றை
ஆட்டுவதும் ஆட்டி அடக்குவதும் - காட்டுவதும்
காட்டி மறைப்பதுவும் கண்ணுதலோன் முன்னமைத்த
ஏட்டின் படிஎன் றிரு.

— குருஞானசம்பந்தர்.

உலக வாழ்க்கையில் சிலவேளை மகிழ்ச்சியும், சிலவேளை வாட்டமும் நிகழ்தல் யாவரும் அறிந்தது. எந்த உயிருக்கும் எப்பொழுதுமே மகிழ்ச்சியோ அல்லது வாட்டமோ இருப்பது இல்லை. மகிழ்ச்சியும், வாட்டமும் மாறிமாறியேவரும். அங்ஙனம் வரும்பொழுது அவற்றிற்கு நம்மையோ அல்லது பிறரையோ காரணர்களாக நாம் கருதி, விருப்பும் வெறுப்பும் கொள்கின்றோம். ஆனால், இஃது ஒரு தவறான செயலே அன்றிச் சரியான செயல் அன்று என்பதைப் பெரியோர்கள் நமக்குப் பல வகையில் எடுத்துக் காட்டியுள்ளார்கள்.

ஒரு செயலுக்கு ஒருவர் காரணர் என்பது உண்மையாயின், அவர் விரும்பியபொழுது அச்செயல் நடைபெறுதலும், விரும்பாதபொழுது அச்செயல் நடைபெறுதொழிதலும் வேண்டும். ஆனால், இவ்வுலகில் ஒருவர் தமக்கோ பிறர்க்கோ செய்ய விரும்பும் செயல்கள் அவரால் செய்ய முடியாமல் போவதையும், செய்ய விரும்பாத செயல்கள் நிகழ்வதையும் எங்கும் யாரிடத்திலும் பார்க்கின்றோம். ஆகவே, அச்செயல்களுக்கு நாம்தான் காரணம் என்று நினைப்பது எப்படி உண்மையாகும்? இஃது உண்மையன்று என்றால், மற்று எது உண்மை

என்னும் வினா எழுகின்றது. அதற்கு விடை, 'எல்லாவற்றிற்கும் முதல்வனாகிய இறைவனே காரணம்' என்பதுதான்.

" ஒன்றை நினைக்கின் அது ஒழிந்திட் டொன்றாகும்
அன்றி அதுவரினும் வந்தெய்தும் - ஒன்றை
நினையாத முன்வந்து நிற்பினும் நிற்கும்
எனை ஆளும் ஈசன் செயல் "

என்ற ஔவையார் வாக்கில், இது விளக்கமாக உரைக்கப் பட்டிருத்தலைக் காணலாம்.

இறைவன் செயல்களாகிய இவற்றை நம் செயலாக நினைப் பதே நாம் செய்யும் தவறுகளில் முதலாவது தவறு. இந்தத் தவற்றை ஒட்டித்தான் நம்பால் மற்றைய எல்லாத் தவறுகளும், நிகழ்கின்றன. இறைவனது செயலை நம் செயல் என்று கூறு வதை ஒருகளவுச்செயல் என்கின்றார், உமாபதி சிவாசாரியார்

" வஞ்சமுடன் ஒருவன் வைத்த நிதிகவரத்
துஞ்சினனோ போயினனோ சொல் "

என்ற குறள் வெண்பாவையும்,

" வெள்ளத்துள் நாவற்றி எங்கும் விடிந்திருளாம்
கள்ளத் தலைவர் கடன் "

" கள்ளத் தலைவர் கடன்கருதித் தங்கருணை
வெள்ளத் தலைவர் மிக "

என்னும் குறள் வெண்பாக்களில், ' கள்ளத் தலைவர் ' என்ற தொடரையும் அவர் கூறியிருத்தலைக் காண்க.

யாவும் இறைவன் செயலே என்பதை மறந்து, பிறர் செயலாகக் கருதுவதனாலேயே, உலகில் நமக்குச் சிலர் உறவும், சிலர் பகையும் ஆகின்றனர். உறவானவரிடத்து விருப்பும், பகை யானவரிடத்து வெறுப்பும் நம்மிடையே உண்டாகின்றன. இந்த விருப்பு வெறுப்புக்களால் உலகில் எத்துணையோ நல்லனவும், தீயனவும் ஆகிய செயல்கள் நிகழ்ந்து, உலக வாழ்க்கையே ஒரு பெரும் போராட்டமாகி விடுகின்றது. ஆகவே, ' யாவும் அவன் செயல் ' என்ற உணர்வு பிறந்துவிடுமாயின், இப்போராட்டங் கள் எல்லாம் ஒழிந்து, அலையிலாத சாகரம் போன்ற அமைதி நிலை தோன்றுவதாகும். இதனைத் தாயுமானவர்.

" அவனன்றி ஓர்அணுவும் அசையா தெனும்பெரிய
ஆப்தர்மொழி ஒன்றுகண்டால்
அறிவாவ தேது ? சில அறியாமை ஏது "

என்று தொடங்கி, விரிவாகப் பலவற்றைச் சொல்லிச்சென்று, இறுதியில்

" எவர் சிறியர்? எவர் பெரியர்? எவர் உறவர்? எவர் பகைஞர்?
யாதும்உனை யன்றிஉண்டோ ?"

என்று முடித்தார். தாயுமானவர் விரிவாக விளக்கிய இக் கருத்து, எங்கள் குருஞானசம்பந்தர் திருவாக்கில்,

" அவரவருக் குள்ளபடி ஈசன்அரு ளாலே
அவரவரைக் கொண்டியற்ற லானல் - அவரவரை
நல்லார்பொல் லார்என்று நாடுவதென் நெஞ்சமே
எல்லாம் சிவன்செயல்என் றெண் "

என்று சுருக்கமாக விளங்குதல் காணலாம்.

'இறைவனை உணர்தலாலேயே அமைதிநிலை வரும்' என்பதையே திருவள்ளுவர்,

" தனக்குவமை இல்லாதான் தாள்சேர்ந்தார்க் கல்லால்
மனக்கவலை மாற்ற லரிது "

என்று கூறினர். இதனையே எங்கள் குருஞானசம்பந்தரும்,

" உனக்குப் பணிசெய்ய உன்றனையெந் நாளும்
நினைக்க வரமெனக்கு நீதா — மனக்கவலை
நீக்கின்ற தென்மதுரை நின்மலனே எவ்வுலகும்
ஆக்கின்ற சொக்கநா தா "

என்று அருளுகின்றார்கள். இவ்வாறு, எல்லாவற்றையும் சிவன் செயலாக உணரும் சிவஞானம் கைவரப்பெற்றவர்கள், இல்லறத்தில் இருப்பினும், துறவறத்தில் இருப்பினும் ஒன்றே என்பதை,

" சாட்டையிற் பம்பர சாலம் போல்எலாம்
ஆட்டுவான் இறைஎன அறிந்து நெஞ்சமே
தோட்டம்ஒன் றறஅருட் செயலில் நிற்றியேல்
வீட்டறம் துறவறம் இரண்டும் மேன்மையே "

என்று தாயுமான அடிகள் அருளுகின்றார்.

'எல்லாம் இறைவன் செயல்' என உணராது, பிறர் செயலாக எண்ணும்பொழுது 'நான்' என்னும் முனைப்புத் தோன்றும்; அவன் செயலாக எண்ணின், அம்முனைப்புத் தோன்றாது ஒழியும். ஆகவே,

"யான்என தென்னும் செருக்கறுப்பான் வானோர்க்
குயர்ந்த உலகம் புகும்"

என்ற திருவள்ளுவர் திருவாக்கின்படி, இறை அருளில் நிற்பவர், வீட்டினை அடைதல் எளிதாகின்றது.

இவ்விடத்தில், 'எல்லாம் இறைசெயல்' என்பது பற்றி ஓர் ஐயம் தோன்றலாம். அஃதாவது, கருணையாளனாகிய இறைவன், ஒன்றும் அறியாத உயிர்களை ஏன் இவ்வாறு உலகத்தில் பல்வேறு அல்லல்களுக்கு உள்ளாக்கித் துன்புறுத்த வேண்டும்?' என்று வினவலாம். அது நேர்மையான ஓர் வினாவே. அதற்கு விடை இது: 'இறைவன் இன்ப நிலையில் இருந்த உயிர்களை இத்தன்மையான துன்பத்திற்கு உள்ளாக்கவில்லை; பெருந் துன்பத்திற்கு உள்ளாய் இருந்த உயிர்கள், அதினின்றும் நீங்கித் தன்னை அடைந்து, தனது வரம்பில் இன்பத்தைத் துய்த்தற் பொருட்டே இச்செயல்களைச் செய்கின்றான்'.

உயிர்களுக்கு இயற்கையாய் உள்ள பெருந்துன்பமாவது, காரிட்ட ஆணவக் கருவறையில் அறிவற்ற கண்ணிலாக் குழவியைப்போற் கட்டுண்டு கிடந்ததேயாகும். அந்நிலையில் இருந்த உயிர்களைச் சிறிது ஒளியுள்ள இடத்தில் கொண்டுவந்தது போன்றதே அவைகளைப் பிறப்பு எடுக்கச் செய்தது. முழுஒளி இல்லாமல், சிறிது ஒளியுள்ள இடத்தில் தட்டுத் தடுமாறி வீழ்வது போன்றதே, உயிர்கள், 'நான்' என்னும் முனைப்பினால் பல வினைகளைச் செய்வது. பின்பு அவ்வினைகளுக்கு ஏற்ற பயன்களை அநுபவிக்கச் செய்வது, நோயாளிக்கு மருந்து ஊட்டுவது போன்றது. வினையால் வரும் பிறவித் துன்பமாகிய மருந்தை உண்ண உண்ண, உயிர்கள் ஆணவமலமாகிய நோயினின்றும் நீங்கி இன்புறும். ஆதலால், இறைவன் செய்கின்ற இச்செயல் கருணையாலன்றி வேறொன்றாலன்றாம்.

இத்தகைய நோய் தீர்க்கும் மருத்துவனாய் இருத்தல்பற்றி, இறைவன், 'வைத்தியநாதன்' என்று சொல்லப்படுகின்றான்,

அவனை, 'பவரோக வைத்தியநாதன்' எனக் கூறுவதும் உண்டு. 'பிறவியாகிய நோயைத் தீர்க்கும் மருத்துவன்' என்பது அதன் பொருள். எனவே, 'உயிர்களை இறைவன் ஆட்டுவிப்ப தெல்லாம், அவற்றின் வினையின் படியேயாம்' என்பது விளங் கும். 'எல்லாம் சிவன் செயல்' என்று கூறுமிடத்து, அச் செயல்கள் எந்த முறையின்படி செய்யப்படுகின்றன என்னும் வினவிற்குரிய விடையையும் அமைத்து இனிது விளங்க எங்கள் குருஞானசம்பந்தர் அருளிச்செய்த திருவெண்பாவே முதலில் தரப்பட்டுள்ளது.

இறைவன் செய்யும் செயல் ஒருவகையன்று; பலவகை. கூடாதிருந்த பொருள்களைக் கூட்டுவிக்கின்றான்; கூட்டியவை களைப் பின்பு பிரிந்துபோகும்படிப் பிரித்து விடுகின்றான்; செய லின்றிச் சும்மா இருந்த பொருள்களைச் செயற்படுத்தி ஆட்டு கின்றான்; ஆடுகின்றவைகளின் ஆட்டத்தை அடக்கி அமைதி பெறச் செய்கின்றான்; ஒன்றையும் காணாது அறிவென் னும் கண்ணை இழந்து கிடக்கும் உயிர்களுக்குப் பல பொருள் களையும் காட்டுகின்றான்; காட்டிய பொருள்களைப் பின்னும் காண ஒட்டாது மறைத்தும் விடுகின்றான்; இஃது அவனுடைய திருவிளையாடல். 'விளையாடல்' என்றால், சிறுபிள்ளைகளின் விளையாட்டுப்போன்ற விளையாட்டு அன்று;

"ஐயாநீ ஆட்கொண் டருளும் விளையாட்டின்
உய்வார்கள் உய்யும் வகையெல்லாம் உய்ந்தொழிந்தோம்"

என்றபடி, உயிர்களுக்குப் பெரியதோர் உய்தியைத் தருகின்ற அருள் விளையாட்டு.

கண்ணுதற் கடவுளாகிய சிவபெருமான், கூட்டுவது, பிரிப்பது, ஆட்டுவது, அடக்குவது முதலிய திருவிளையாடல்களை, 'முன் வைத்த ஏட்டின்படி செய்கின்றான்' என்கின்றார், எங்கள் ஆதி பரமாசாரியர். 'முன் வைத்த ஏடு' என்பதுதான், அவரவர்கள் செய்தவினை. அவைகளை இறைவன் மிக நுட்ப மாகக் கணக்கெழுதி வைத்திருக்கின்றான் என்பதைத் திருநாவுக் கரசு சுவாமிகள்,

"தொழுது தூமலர் தூவித் துதித்துநின்
றழுது காமுற் றரற்றுகின் றாரையும்

பொழுது போக்கிப் புறக்கணிப் பாரையும்
எழுதும் கீழ்க்கணக் கின்னம்ப ரீசனே ''

என்று குறித்தருளுகின்றார்.

'' வல்லார்கள் வல்ல வகையால் தொழில்புரிதல்
எல்லாம் உடனே ஒருங்கிசைந்து - செல்காலை
முட்டாமற் செய்வினைக்கும் முற்செய்வினைக் கும்செலவு
பட்டோலை தீட்டும் படிபோற்றி ''

என்பது உமாபதி சிவாசாரியார் திருவாக்கு. இவற்றால் இறைவன் உயிர்களைப் பல வகையாக ஆட்டுவிப்பது அவைகளின் வினைவழியே என்பது புலனாகும். இதனை எங்கள் பரமாசாரிய சுவாமிகள் மற்றொரு வெண்பாவில் ஒருவகையாக விளக்கியருளுகின்றார்கள்.

'' வன்மைபுரி காய மரப்பாவை தன்னை அரன்
கன்மமெனும் சூத்திரத்தாற் கட்டியே - நன்மைதின்மை
ஆட்டுவது நாடாது, அறிவிலார் தம் செயலாய்
நாட்டுதல்போல் உண்டோ நகை ''

என்பது அவ்வரிய திருவெண்பா.

உடம்பு ஒரு மரப்பாவை ; அதில், 'வினை' என்ற கயிறு கட்டப்பட்டிருக்கின்றது ; அக்கயிற்றைக்கொண்டு அந்த மரப்பாவையைத் தன் இச்சைப்படி எல்லாம் ஆட்டித் தான் தோன்றாது மறைந்திருப்பவன் இறைவன். இந்த ஒரு மறை பொருள் இதில் வெளிப்படுத்தப்படுகின்றது. உயிர் உடம்பின் வழியே நிற்றலால் அதனை, 'காயம்' என்றே குறித்தார்.

'' நன்னாரிற் பூட்டிய சூத்திரப் பாவைநன்
னார்தப்பினால்
தன்னாலும் ஆடிச் சலித்திடுமோ அந்தத்
தன்மையைப்போல்
உன்னா லியான்இங் குழல்வதல் லால்மற்
றுனைப்பிரிந்தால்
என்னாலிங் காவதுண் டோஇறைவா கச்சி
ஏகம்பனே ''

என்ற பட்டினத்தார் பாடலும் இங்கு நினைக்கத்தக்கது.

இறைவன் கூட்டுவது, பிரிப்பது முதலிய யாவும் நாம் செய்த வினைக்கேற்பவே ஆதலின், இறைவனை 'கருணை இல்லாதவன்' என்று வெறுப்பதற்கில்லை என்பது சொல்லாமலே விளங்கும். எல்லாவற்றையும் 'எனையாளும் ஈசன் செயல்' என்ற ஔவைப் பிராட்டியாரும்,

" செய்த வினையிருக்கத் தெய்வத்தை நொந்தக்கால்
எய்த வருமோ இருநிதியம் - வையத்து
அறும்பாவம் என்னஅறிந் தன்றிடார்க்கின்று
வெறும்பானை பொங்குமோ மேல் "

என்று வேறோரிடத்தில் அருளினார்.

நாம் செய்த வினைக்கேற்பவே நமக்கு நன்மையும், தீமையும் வருகின்றன என்றால், இறைவன் எதற்கு? என்று சிலர் கேட்கின்றார்கள். அவர்கள், கர்மப் பிரம்மவாதிகள் என்று சொல்லப்படுவார்கள்.

" பண்டையுள கன்மமே கர்த்தா எனும்பெயர்ப்
பட்சம்நான் இச்சிப்பனோ "

என்று தாயுமானவரும் அவர்கள் கொள்கையைக் குறிப்பிட்டுள்ளார். அவர்களுக்கு இதோ எங்கள் பரமாசாரியர் அருளுவது:

" பாசம் சடம்; உயிரோ தானகப் பற்றறியாது
ஈசன் இரண்டும் இணைத்தாட்டிப் - பூசல்என்றும்
செய்பவனே தானே திரும்பி அருள்செய்யாமல்
உய்பவர்கள் உண்டோ உரை "

வினையும், அதன் வழியேவரும் உடம்பும் ஆகிய பாசங்கள் சடம் - அறிவில்லாதவை; ஆகையால் அவை எவ்வாறு உயிர்களை வந்து அடையும்? இனி உயிர் அறிவுடையது என்றாலும், அஃது ஆணவ இருளில் அழுந்திக் கிடப்பதால், அவைகட்குக் கைவிளக்குப் போலத் தனு கரணங்கள் கிடைத்தாலன்றி அறிவு நிகழாது; ஆகவே, அதுதான் சென்று அவைகளை எப்படி எடுத்துக்கொள்ளும்? எனவே, இயல்பாகவே பாசங்களின் நீங்கியுள்ள இயற்கை அறிவினனாகிய இறைவனே இவைகளை இணைத்து ஆரவாரம்பட ஆட்டுகின்றான் என்னும் உண்மை

இதன்கண் நன்கு விளக்கப்படுகின்றது. 'இவைகளை இறைவன் ஏன் இணைத்து ஆட்டவேண்டும்?' என்பதற்கு விடைமுன்பே சொல்லப்பட்டது.

'நாம் செய்த வினைதான் நமக்குப் பயன் தருகின்றது என்றால், தானே வந்து கூடினால் என்ன? இறைவனே கூட்டு விக்க வந்து கூடினால் என்ன? எனின், அதனைத் தெளிவு படுத்தவே, இப்பாடலில், 'திரும்பி அருள் செய்யாமல் உய்ப வர்கள் உண்டோ' என்று அருளிச் செய்தார். அஃதாவது, 'நம்மாலே நமக்கு எல்லாம் ஆவது' என்று எண்ணுகின்றவர் களுக்கு அவர்கள் செய்யும் வினைகளுக்கு அவர்களையே பொறுப் பாக்கி இறைவன் அவற்றின் பயனை ஊட்டுவிக்கின்றான். 'எல்லாம் இறைவனால் ஆவன அன்றி, நம்மால் ஆவது யாதொன் றும் இல்லை' என்று உணர்கின்றவர்களுக்கு அவர்கள் செய்யும் வினைகளுக்குத் தான் பொறுப்பாகி, அவற்றின் பயனை ஊட்டா மல் நீக்கிவிடுகின்றான். 'கூட்டுதல்' என்பதும், 'பிரித்தல்' என்பதும் இவையே; எனவே, வினையிலிருந்து நீங்குதற்கு வழி அவை இறைவன் ஆணையால் வந்து பயன் தருகின்றன அன்றித் தாமாக வந்து பயன் தரவில்லை என்றும், நாம் செய்யும் செயல் களும் அவன் தந்த கருவிகரணங்களைப் பெற்றே செய்கின்றோம் என்றும் உணர்வதேயாகும் என்பது விளங்கும். வினையைக் கூட்டுவியாது, தான் ஏற்றுக்கொள்வதையே, 'திரும்பி அருள் செய்தல்' என்று அருளினார்.

"கட்டிய நீயே அவிழ்க்கின் அல்லது
எட்டுணை யாயினும் யான்அவிழ்க் கறியேன்"

என்றார், பட்டினத்து அடிகளும். இவ்வாறு, எல்லாம் அவன் செயல் என்று உணர்ந்து அந்நிலையில் நிற்பதே, உடல், பொருள் ஆவி மூன்றையும் இறைவன்பால் ஒப்புவிப்பதாகும். அவ்வாறு ஒப்புவித்தவர்க்குத் துன்பம் யாதும் இல்லை என்பதை,

"அன்றே என்றன் ஆவியும்
உடலும் உடைமை எல்லாமும்
குன்றே அனையாய் என்னை ஆட்
கொண்ட போதே கொண்டிலையோ

இன்றோர் இடையூறு எனக்குண்டோ
எண்டோள் முக்கண் எம்மானே
நன்றே செய்வாய் பிழைசெய்வாய்
நானே இதற்கு நாயகமே ''

என்னும் திருவாசகத்தால் அறியலாம். 'ஆவி' என்பது, 'நான்' என்னும் சிவபோதம். 'உடல்' என்பது கருவி கரணங்கள். 'உடைமை' என்பது, வினைகள்; எனவே, இவை மூன்றும் முறையே, 'ஆணவம், மாயை, கன்மம்' என்னும் மும்மலங்களையும் குறிப்பனவாய், அப்பாசங்களினின்றும், நீங்கி நிற்கும் நிலையைத் தெரிவிப்பனவாதல் அறிக.

திருவருள் பெற்றோர் அத்திருவருளில் நிலைத்து நிற்கும் நிலை இதுவேயாகலின், எங்கள் பரமாசாரியசுவாமிகள், இன்பம்தரும் பூரணத்துக்கே தாகமுண்டாய் ஓடி வருங்காரணர்க்கு, "கண்ணுதலோன் முன் அமைத்த எட்டின் படிஎன்றிரு" என்று உண்மையை உபதேசித்து, அந்நிலையில் நிற்பித்தருளினார்கள். இவ்வுபதேசத்தினைத் தொடக்கத்திற்காட்டிய திருவெண்பா என்றும் யாவருக்கும் விளக்கி நிற்கும். அதனை உணர்வார் உணர்ந்து பயன் பெறுவார்களாக.

---

## EXTRACT FROM THE VISITORS' BOOK

### Dharmapuram Adhinam

Sri Amirthagatesvaraswamy Devasthanam, Tirucadaiyur.

இன்று நல்ல தரிசனம் கிடைக்கும் பாக்கியம் கிட்டியது. கோயில் அதிகாரிகள் தரிசனார்த்திகளுக்கு நல்ல சௌகரியங்கள் செய்து கொடுக்கிறார்கள். மிகப் பொறுப்புணர்ச்சியுடன் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்களின் பரிபாலனம் நன்கு பிரகாசிக்கிறது.

(ஒப்பம்) ஐ. ஏ. சிதம்பரம் பிள்ளை எம். ஏ.,
இலஞ்சி.
26—4—65

திருத்தருமையாதீனத்திற்குச் சொந்தமான திருவாரூர்- ஸ்ரீ தியாகராஜசுவாமி
தேவஸ்தானம் இராஜன்கட்டளையைச் சேர்ந்த கடாரங்கொண்டான் ஸ்ரீ கைலாசநாதர்
திருக்கோயில் மகாகும்பாபிஷேகம்



யாகசாலையில் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்களும் திருவாரூர் நகரப் பெருமக்களும்

# சித்தாந்த விஞவிடை

தருமையாதீனத் தமிழ்ப்புலவர், சித்தாந்தக் கலைமணி,
மகாவித்துவான்.

திரு. சி. அருணைவடிவேலு முதலியார்

( மலர் 24, இதழ் 5, பக்கம் 276 இன் தொடர்ச்சி )

## பதியினது பொதுவியல் தொகைப் பொருள்

மாணாக்கன் : இதுகாறும், அடிகள் அருளிய விளக்கங்களால், அடியேன், 'பதிப்பொருள் ஒன்று உண்டு' என்பதையும், அதனது பொதுவியல்பினையும் ஒருவாறு விளங்க உணர்ந்தேன்; இனி, பதியினது உண்மை இயல்பினையும் அவ்வாறு விளங்க அருளிச்செய்தல் வேண்டும்.

ஆசிரியர் : பலவகைப்பட விரிவாக அவ்வப்பொழுது நீ அறிந்த பதியினது பொது இயல்புகளைத் தொகுத்துக் கூற வல்லையோ? வல்லையாயின், கூறுதி; கேட்போம்.

மாணாக்கன் : உலகம், 'தோன்றல், நிற்றல், அழிதல்' என்னும் முத்தொழிலில் மாறி மாறிச் செல்லும் தன்மையுடையது; ஆகவே, அஃது இல்பொருளோ, உள்ளதும் இல்லதும் அல்லாத சூனியப் பொருளோ, உள்ளதும் இல்லதுமான சமுச்சயப் (ஐயப்) பொருளோ அன்று; தெளிவாக, உள்பொருளேயாம்.

'இயற்கைப் பொருள், செயற்கைப் பொருள்' என்னும் இருவகை உள்பொருள்களில், உலகம் செயற்கைப் பொருள் என்பது, தோன்றி நின்று அழியும் செயல் வேறுபாடுகளால் இனிது விளங்குதலாலும், உள்ளதாகிய செயற்கைப் பொருட்குச் செய்வோன் ஒருவன் இருத்தல் இயல்பாதலாலும், உலகைச் செயற்படுத்தும் செய்வோனாகிய இறைவன் ஒருவன் உளன் என்பது தெளிவு.

இனி, சிறிய செயலாயினும், பெரிய செயலாயினும், செயல் என்பன யாவும், ஒருவன் இச்சைவழியன்றிப் பலரது இச்சையின் வழி நடத்தல் இல்லையாதலின், உலகத்தின் முத்தொழில்களாகிய

பெருஞ்செயலும் ஒருகடவுளின் இச்சைவழியன்றிப் பலகடவுளரது இச்சையின்வழி நடப்பன அல்ல; ஆதலின், முதற் கடவுளாகிய பதிப்பொருள் ஒன்றேயன்றிப் பல இல்லை. ஆகவே, வேதத்திலும், பிற நூல்களிலும் அளவற்ற கடவுளர்கள் (தேவர்கள் - தெய்வங்கள்) சொல்லப்படுவதும், உலகில் பல்வேறு கடவுளர்களுக்கு வழிபாடுகள் செய்யப்படுவதும் கண்கூடாய் இருப்பினும், எல்லாக் கடவுளரும் ஒரு முதற்கடவுளின் ஆணைவழி ஓர் ஓர் எல்லையளவில் முதன்மைபெற்ற தலைவராவரன்றி, எல்லாரும் எல்லா முதன்மையும் உடைய முதற்கடவுளர் அல்லராம்.

பலராகச் சொல்லப்படும் கடவுளரில் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு சிறப்புத் தொழில் சொல்லப்படும் முறையில், '.படைத்தற் கடவுள், காத்தற் கடவுள், அழித்தற் கடவுள்' என்னும் மூவர் சிறப்புடையராவர். அவருள், உலகத்தின் முதல் தோற்றத்தை நோக்க, படைத்தற் கடவுளே முதற்கடவுள் என்றும், பொருளை நுணுகி ஆராயாது சொல்லளவில் நோக்க, காத்தற் கடவுளே முதற் கடவுள் என்றும் எண்ணவரினும், அழிந்த உலகம் மீளத்தோன்றி, நின்று, மீள அழிந்து வருதலாகிய உண்மையை நோக்க, அழித்தற் கடவுளே முதற்கடவுள் என்பது முடிவாகும். ஆகவே, எல்லாத் தொழிலும் அழித்தற் கடவுளுடையனவேயன்றி, ஒன்றேனும் பிற கடவுளருடையது அன்று.

'உலகத்தைப் படைத்தல், காத்தல், அழித்தல்' என்னும் முத்தொழில்களை இறைவன் செய்வது, உயிர்களின் நலங்கருதிய கருணையாலேயாம். அங்ஙனம், செய்யுமிடத்து அவைகளின் வினைகட்கு ஏற்ப அவற்றைச் செய்வன். அதனால், இறைவன், பொன்னும் பணியும்போல உயிர்களோடு ஒன்றாகாமல், உடல் உயிர் போலக் கலப்பினால் ஒன்றாகியும், இருளும் ஒளியும் போல முற்றிலும் வேறாகாது, கண்ணொளியும் கதிரொளியும்போலப் பொருள் தன்மையால் வேறாகியும், சொல்லும் பொருளும்போலச் சொல்லளவில் உடனாகாது, கண்ணொளியும் ஆன்ம அறிவும் போல உண்மையாகவே உடனாகியும், 'பேதம், அபேதம், பேதாபேதம்' என்னும் அம்மூன்று தன்மையும் ஒருங்கு தோன்ற, அவற்றிற்குப் பொதுவாய் நிற்கும் அத்துவித நிலையாகிய தொடர்பை உயிர்கள்பால் கொண்டு நிற்பன்.

ஒருவனாகிய இறைவன், அளவில்லனவாகிய பொருள்களில் இவ்வாறு இரண்டறக் கலந்து நிற்றல், அவனது சத்தியாலேயாம். ஆகவே, ஞாயிறு, 'தானும், தனது கதிரும்' என இரு

கூருய் இயைந்து நிற்றல்போல, இறைவன், 'தானும், தனது சத்தியும்' என இருகூருய் இயைந்து நிற்பன். இறைவன் ஒருவனேயாகலின், அவனது சத்தியும் ஒன்றே. ஆயினும், தீயின் சத்தி ஒன்றே அதன் செயல்கள்பற்றி, 'சுடும் சத்தி, அடும் சத்தி' முதல் பலவாகச் சொல்லப்படுதல் போல, இறைவன் சத்தி ஒன்றே, 'படைத்தற் சத்தி, காத்தற் சத்தி, அழித்தற் சத்தி' முதற் பலவாகச் சொல்லப்படும். சிறப்பாக, 'ஞானம், இச்சை, கிரியை' என மூன்ருகச் சொல்லப்படும். ஞானமே இறைவனது சத்தியின் உண்மைநிலே; அஃது எப்பொழுதும் விளக்கும் தன்மையையே உடையது; மறைக்கும் தன்மை உடையது அன்று. அந்நிலே. 'பராசத்தி' என்னும் பெயருடையது. இறைவன் உலகத்தைத் தொழிற்படுத்தாது தன்னிலேயில் இருக்கும் நிலேயிலே, அவனது சத்தி பராசத்தியாய் இருக்கும்.

இறைவன் உலகத்தைத் தொழிற்படுத்தப் புகும்பொழுது, அவனது சத்தி மலத்தைச் சார்ந்து நின்று அவற்றைத் தொழிற்படுத்துமாகலானும், மலத்தின் தொழில் உயிரின் அறிவை மறைப்பதே யாகலானும் அம்மறைப்புத் தொழிலே அச்சத்தி மேல் ஏற்றி, அச்சத்தியை, 'மறைப்புச் சத்தி' என்பர். 'மறைப்புச் சத்தி' எனினும் 'திரோதான சத்தி' எனினும் ஒன்றே, இறைவன் உலகத்தைத் தொழிற்படுத்தத் தொடங்கும் நிலே, 'ஆதி' எனப்படும் ஆதலின், திரோதான சத்திக்கு, 'ஆதி சத்தி' என்பதும் பெயராயிற்று. ஆதி சத்தி, அறிவாய் நின்று அறிந்தும், இச்சையாய் நின்று விரும்பியும், முயற்சியாய் நின்று செயலாற்றியும் வருதலின், அந்நிலேகளில் முறையே, 'ஞான சத்தி, இச்சா சத்தி, கிரியாசத்தி' என்னும் பெயர்களேப் பெற்று நிற்கும். எனவே, 'பராசத்தி, ஆதி சத்தி. ஞான சத்தி. இச்சா சத்தி, கிரியாசத்தி' என்னும் பஞ்ச சத்திகள் சிறப்பாகக் குறிக்கப் பெறுகின்றன.

உலகத்தைப் படைத்தல் முதலிய மூன்று தொழில்களும், 'மறைத்தல்' என்னும் ஒரு தொழிலின் பிரிவுகளாகும். இவை இறைவன் உயிர்கள் தன்னேக் காணுது, உலகத்தையே கண்டு நிற்கச் செய்யும் செயல்களாகலின், அவ்வாருயின. பக்குவம் வந்த உயிர்களுக்கு ஞானத்தைக் கொடுத்துத் தன்னேக் காட்டித் தன்னேப் பெறச் செய்வது. 'அருளல்' எனத் தனியான வேருெரு செயலாகும். எனவே, 'இறைவன் உயிர்கள் பொருட்டுச் செய்யும் தொழில் ஐந்து' என்பது பெறப்படும்.

இவ்வைந்தொழிலின் விரியாக எத்துணையோ தொழில்கள் நிகழும். அவற்றை எல்லாம் இறைவன் அவ்வவற்றிற்கு ஏற்ற வடிவையும் பெயரையும் இத்திரோதான சத்தியாலே கொண்டு செய்வன். அதனால், அவன் அளவற்ற வடிவும், பெயரும், தொழிலும் உடையவன் ஆகின்றான், அவ்வடிவங்கள், 'அருவம், உருவம், அருவுருவம்' என மூன்று வகைப்படும். அவ்வடிவங்களில் உருவத்திருமேனி, 'போக வடிவம், யோக வடிவம், வேக வடிவம்' என மூன்றாய் விளங்கும். உயிர்கட்கு உலக இன்பத்தைத்தரக் கொள்வது, யோக வடிவம்; வீட்டின்பத்தைத் தருதற்குக் கொள்வது, யோக வடிவம்; உயிர்கள் செய்த குற்றத்தை ஒறுப்பினால் நீக்குதற்குக் கொள்வது, வேக வடிவம்.

இங்ஙனம் பல்வேறு வடிவும், பெயரும் உடையனாய்ச் செய்யும் இறைவனது பல்வேறு தொழில்களைத் தாம் செய்ய விரும்பும் விருப்பம் உடையவர், அவற்றிற்கேற்ற புண்ணியங்களைச் செய்வராயின், அவர்கட்கு அவ்வடிவையும், பெயரையும் கொடுத்து, அத்தொழில்களை அவர்கள் நடத்துமாறு அருள் செய்து அவைகளை அவர்கள்பால் நின்று, அவர்கள் வாயிலாக நடத்துவன். அவ்வாறு அருளும் அருளாகிய, 'ஆணை' என்பதும், அவனது திரோதான சத்தியே. அவ்வாணையாகிய சத்தி தம்பால் பதியப்பெற்ற கடவுளரே அணுபட்சத்தினராவர். பல்வேறு நிலையினனாக நிற்கும் இறைவனது நிலைகளே, 'சம்பு பட்சம்' எனப்படும். ஆகவே 'ஒருவனே மூவராயும், மற்றும் பல தேவராயும் நிற்கின்றான்' என வரும் வாக்கியங்கள். சம்பு பட்சத்தைக் குறிப்பனவும், 'இறைவன், தேவராலும், மூவராலும், அறியப்படாதவன்' எனவும், 'அவரெல்லாம் பிறப்பிறப்பிற் பட்டுழலும் சிறு தெய்வங்களாகிய உயிர்களே யன்றி, பெருந்தேவனாகிய முதற்கடவுளர் அல்லர்' எனவும் வரும் வாக்கியங்கள் அணுபட்சத்தைக் குறிப்பனவும் ஆதலின். அவை தம்முள் முரணுதல் உடையன அல்ல. இவ்வாறு இறைவன் தானே நேர்நின்றும், பிறரை வாயிலாகக் கொண்டும் செய்யும் தொழில்களால், உயிர்கள் பாசத் தடையினின்றும் நீங்கி, வீட்டின்பமாகிய பேரின்ப வாரியுள் திளைக்கும். இங்ஙனம் உயிர்கள் பொருட்டுத் தனது சத்தியால் பல்வேறு வடிவும், பெயரும் கொண்டு ஐந்தொழில் செய்தலே, இறைவனது 'தடத்தலக்கணம்' எனப்படும் பொதுவியல்பாகும்.

இறைவன் சொரூப நிலையாகிய தன்னியல்பில் நிற்குமிடத்து, 'சிவன், பரசிவன், பரம சிவன், சுத்த சிவன்' என்றெல்லாம்

சொல்லப்படுவன். அவன் உலகுயிர்களோடு இரண்டறக் கலந்து நிற்கும் நிலையில், 'சத்தி' என்று சொல்லப்படுவன். அவ்வாறு கலந்து நின்று பல்வேறு வடிவும், பெயரும் கொண்டு ஐந்தொழில் இயற்றும் நிலையில், 'பதி' எனப் படுவன்.

பதி நிலை, 'சிவம், நாதம், விந்து, சதாசிவன், மகேசுவரன், உருத்திரன், மால், அயன்' என ஏழு வகைப்படும். இவை ஏழும் சிவபேதமாம். இவைகட்கு முறையே அமையும் சத்தி பேதங்கள். 'சத்தி, விந்து, மனோன்மனி, மகேசுவரி, உமை, திருமகள், நாமகள்' என்பன. இவ்வேழில், முதல் இரண்டும் ஐந்தொழில், செய்யக் கருதும் நிலை, ஆதலின், அவை இரண்டும் அருவத் திருமேனியாம். 'சதாசிவன்' என்பது, ஐந்தொழிலிற் புகும் நிலை, ஆதலின், அஃது அருவுருவத் திருமேனி. சிவலிங்கத் திருமேனி இச் சதாசிவ மூர்த்தமே. இறுதியில் உள்ள நான்கும் ஐந்தொழிலை இயற்றும் நிலை ஆதலின், அவை உருவத் திரு மேனிகள். பல்வேறு வகையாய்த் தோன்றும், உருவத் திரு மேனிகள்யாவும், மாகேசுரமூர்த்தங்களே. 'அருவம், அருவுருவம், உருவம்' என்னும் மூன்று நிலைகளும் முறையே, 'இலயம், போகம், அதிகாரம்' எனப் பெயர்பெறும். அதிகார நிலையில், 'மால் அயன்' என்னும் இரண்டில் அணுபட்சமாய் நிற்போர், முக்குணங்கள் நீங்கப்பெறுமையின், அந்நிலைகளை மாகேசுர மூர்த்தங்களாக எடுத்துக்கூறுதல் இல்லை. அணுபட்ச நிலையின ருக்குச் சத்திகளாய் வரும் தேவியரும், அந்நிலையைப் புண்ணிய மேலீட்டால் எய்திய அணுபட்சத்தவர்களே. இறைவனது 'தடத்த லக்கணம்' எனப்படும் பொதுவியல்பை அடிகள் அருளிச்செய்தவாற்றிலிருந்து அடியேன் ஒருவாறு அறிந்து கொண்டவற்றை இங்ஙனம் புலப்படுத்திக்கொண்டேன்.

[ தொடரும் ]

சத்துருவும் மித்துருவும் தாரணியில் வேறில்லை
சத்துருவும் மித்துருவும் தன்னெஞ்சே — பெத்தமலம்
வீட்டும் படிக்கு வினைக்கி டுனைத்தனுவோ(டு)
ஆட்டுஞ் சிவனென் றறி.

—சிவபோகசாரம்.

# நெஞ்சே வாழ்த்து

வித்துவான். திருமதி. ப. நீலா.

வையத்துள் வாழ வல்லமை தந்தான் இறைவன். வடிவான உடல், வகையான சூழல், வடுவிலா இன்பம் இவற்றை ஆக்கித் தந்தவர் யாரோ அவரே அழியா நெறி ஒன்றையும் காட்டி நம்மை அழைக்கிறார். அங்கே அழிவிலா இன்பம் உண்டு என்று அறிந்தும் நமது மயக்க அறிவு இவ்வுலகச் சூழலிலேயே சுழல்வது எது கருதியோ!

இவ்வுலக வாழ்விலே - காலத்தால் ஒருவன் செய்த உதவி ஞாலத்தைக் காட்டிலும் பெரிதாக மதிக்கப்படுகிறது. அவ்வுதவி தினையளவாக இருப்பினும் பயன் தெரிவோரால் பனையளவின தாக மதிக்கப்படும். நாம் உதவி யொன்றும் செய்யாதபோது ஒருவர் நமக்கு உதவுவாரானால் அவ்வுதவிக்கு வையகம் வானகம் இரண்டுமே ஈடாகா. அப்படியிருக்க காலங்கருதிக் கடமையோடு கூட இறைவன் நமக்களித்துள்ள பேறுகளுக்கு நாம் எவ்வண்ணம் நன்றி செலுத்தப்போகிறோம். தவறுடைய செயல்களைச் செய்து, பின் இரங்கலும், தரமுடைய செயல்களைச் செய்யாமையும் ஆகிய இரண்டும் நம்மைப்பற்றியுள்ள மாசுகள், இவையிரண்டுமே அகலவேண்டும், என்றால், அதற்காக நாம் செய்ய வேண்டுவது என்ன? இதற்கு விடை பல சான்றோர்களின் நல்வாக்கில் பயிலும்.

ஒருவரைப் பாராட்டும் முகத்தால் வாயினிக்கப் பேசுகின்றவர்கள், அவ்வார்த்தைகளைத் தம் நெஞ்சிலிருந்து கூறுவதில்லை. இதற்குமாறாக, வாய்ச்சொல் பாராட்டைச் செய்யாதவர்கள் தமது உள்ளம் நிறைந்த உவப்பைக் கண்களாலேயே வெளிப்படுத்தி விடுதல் உண்டு. முன்னதைக் காட்டிலும் பின்னதில் பலமும் பயனுமுண்டு. நெஞ்சார நினைத்தல் - நெஞ்சுவக்க வாழ்த்துதல் என்ற செயல் ஒன்றே போதும், நமது நன்றியுணர்வினை வெளிப்படுத்த. உலகியல் நிலைக்கு இது எத்துணைப் பொருத்தமோ? தெரியாது. அருளியல் துறையில் இது செய்தாலே போதும் என்பார், அனுபவத்திலும் அறிவிலும் மூத்த அப்பர் பெருமான்

" நெஞ்சே நீ நினையாய்
நிமிர் புன்சடை நின்மலனை
மஞ்சாடும் மலைமங்கை மணாளனை
நெஞ்சே நீ நினையாய் "

எங்கும் நிறைந்த பரம்பொருள், தன்னையே நமக்குக் கொடுத்துள்ளான். நாமோ பார்வையில் . எண்ணத்தில் மயக்கம் கொண்டு, அவனது மலர்க்கழல்களை வணங்கவும் வகையற்றுத் திரிகின்றோம்.

" தந்தது உன் தன்னைக் கொண்டது என் தன்னைச்
சங்கரா யார் கொலோ சதுரர்
அந்தமொன்றில்லா ஆனந்தம் பெற்றேன்
யாதுநீ பெற்ற தொன் றென்பால் "

என்றும்,

" வம்பனாய்த் திரிவேனை வாவென்று
வல்வினைப் பகை மாய்த்திடும்
உம்பரா னுல கூட றுத்தப்
புறத்தனாய் நின்ற எம்பிரான்

என்றும் மணிவாசகப்பெருமான் அருளுவார். ஆண்டவன் நாம் உய்யும் வழிகளை எல்லாம் அருளியும், அவைகளை உணராத நமது பேதைமை உணர்வு குறித்து இரங்கி,

' என்னாலறியாப் பதந் தந்தாய்
யான தறியா தேகெட்டேன் '

என்று கூறுகிறார்,

தோலின் பாவையை உடைமைக்காரன் ஆட்டுவது போல நான் என் நினைவின்றி, சீலமின்றி சுழன்று அலைகிறேன்; எனக்கு அறிவுதரும் நாள் எந்நாளோ என்று ஏங்குகிறார்.

சீலமின்றி நோன்பின்றிச்
செறிவே யின்றி அறிவின்றித்
தோலின் பாவைக் கூத்தாட்டாய்ச்
சுழன் று விழுந்து கிடப்பேனை
மாலுங்காட்டி வழிகாட்டி
வாரா உலக நெறியேறக்
கோலங்காட்டி ஆண்டானைக்
கொடியேன் என்றோ கூடுவதே !

சிவபோகசாரத்தில் மரப்பாவை ஆட்டம் காணப்படுகிறது.

' வன்மைபுரி காய மரப்பாவை தன்னை அரன்
கன்மமெனுஞ் சூத்திரத்தால் கட்டியே · நன்மைதின்மை
ஆட்டுவது நாடா தறிவிலார் தஞ்செயலாய்
நாட்டுதல்போல் உண்டோ நகை '

கையில் ஊமன் :

கைகளற்ற ஊமையொருவன் வெயில் நன்ருகப் பரவிய உச்சி நேரம்; அருகே உள்ள பாறையொன்றில் வைக்கப்பட்டிருந்த வெண்ணெய் உருகிக்கொண்டிருக்கிறது. பார்த்துக்கொண்டிருந்தும் அந்த வெண்ணெயைப் பாதுகாக்க முடியாத பரிதாபம். ஆம்! வாயிருந்தால் யாரையாவது கூவிச் செய்தியைச் சொல்லலாம். ஆனுல் ஊமை. பிறர் தயவின்றிச் செயலில் ஈடுபடலாம் என்ருலோ, கைகள் இல்லை.

' கையில் ஊமன் கண்ணில் காக்கும்
வெண்ணெய் உணங்கல் போல '

என்ற உவமை குறுந்தொகையுள் மற்ருெரு செய்தி விளக்கத்திற்காக, ' வெள்ளி வீதியார் ' – என்ற புலவர் பெருமாட்டியாரால் எடுத்தாளப்படுகிறது. புறநானூற்றில் கண்ணற்ற ஊமை ஒருவன் பேசப்படுகிருன் : நடு இரவு; அலைமோதி ஆர்ப்பரிக்கும் நீலக்கடல்; கலமொன்று திசைமாறிச்சென்று கவிழ்ந்துவிட்டது. அதிலே அகப்பட்டுக்கொண்டான் கண்ணிலி ஊமன். பார்வையிருந்தால் எதையாவது பற்றிக்கொள்ளலாம். குரலிருந்தால் அரற்றியாவது அவலத்தைக் குறைத்துக்கொள்ளலாம்; இல்லையாஞல் கூவி உதவி பெறலாம். இரண்டுமில்லையே !

' கண்ணிலி ஊமன் கடற்பட்டாங்கு '

என்பது அவலச் சுவையைப் பிழிந்து காட்டும் அற்புதவாக்கு.

மணிவாசகப் பெருமானே இவற்றிற்கெல்லாம் சிறிதும் குறைவுபடாத வகையில் விழித்திருந்தே பொருளை இழக்கும் வீணனைச் சித்திரிக்கின்ருர். தன்னையே கருநிலைப் பொருளாகக் கொண்டு, இந்த அவலத்தை நம் மனத்தில் பதிய வைக்கும் திறம் போற்றற்குரியது.

பொய்மையே பேசிப் பொழுதினைச் சுருக்கும் சிறுமைக்குணம் நம்மிடையே காணப்படுவதுதானே. இதனை,

' பொய்யனேன் அகநெகப் புகுந்தமு தூறும்
புதுமலர்க் கழல் இணையடி பிரிந்தும்
கையனே னின்னும் செத்திலேன் அந்தோ
விழித்திருந் துள்ளக் கருத்தினை இழந்தேன் '

என்பார்.

ஆட்கோள்ளும் அண்ணல் :

கடையவனேயும் கருணையினால் ஆண்டுகொண்ட விடையவனே! இனி நீ என்னை விட்டுவிட்டால் நான் கெடுவது நிச்சயம். ஆகவே உன்னைச் சிக்கென நான் பிடித்துவிட்டேன். இருந்தும் உனது அருட்பாங்கிற்கு நான் என்ன கைம்மாறு செய்யவல்லேன்! என்று உள்ளுருகிப் பணிகிறார். ஒருநாமம் ஒருருவம் ஒன்றுமில்லாத பரம்பொருள் எத்தனை எத்தனை வடிவங்களில் வந்து ஆட்கொள்ளுகிறான். நம் மருள்கெட அவனது திருவடிகளை வாழ்த்துதல் ஒன்றே அமையும். அதுதான் நாம் செய்ய வேண்டுவது! மணிவாசகரின் வாசகங்கள் உருகாத நெஞ்சத்தையும் உருகுவிக்கக் கூடியன. உள்ளொளி ஊட்டுவன. ஒண்மைநெறி காட்டுவன.

‘ காட்டகத்து வேடன் கடலில் வலைவாணன்
நாட்டிற் பரிப்பாகன் நம்வினையை - வீட்டி
அருளும் பெருந்துறையான் அங்கமல பாதம்
மருளும் கெடநெஞ்சே வாழ்த்து ’

●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●

## EXTRACT FROM THE VISITORS' BOOK

Dharmapuram Adhinam

Sri Kambahareswaraswami Devasthanam, Thirubuvanam.

இன்று இத்திருத்தலத்தின் தரிசனம் கிடைக்கும் பெரும்பேறு கிடைத்தது எங்கள் பாக்கியமே. திருக்கோயிலின் உள் வாயிலில் நுழைந்தவுடனே இதன் நிர்வாகம் தருமபுரம் ஆதீனத்தின்கீழ் உள்ளது என்பது வெளிப்படையாகிறது. கோவிலும் உள், வெளிப்பிராகாரங்களும் மிகவும் சுத்தமான முறையில் வைக்கப்பட்டுள்ளன. கம்பேசுவரர், சரபேஸ்வரர், அறம் வளர்த்தநாயகி அம்மன் தரிசனம் அமைதியான முறையில் கிடைத்தது. மீண்டும் இத்திருக்கோவிலுக்கு வரும் பாக்கியத்தை எதிர்பார்க்கிறோம்.

| | |
|---|---|
| (Sd.) P. Ratnasamy; | (Sd.) முத்துக்காமாட்சி, |
| மாவட்டக் கலெக்டரின் | மாவட்டக் கலெக்டரின் |
| உதவியாளர். தஞ்சை. | உதவியாளர், தஞ்சை. |

10—4—65.

# சிவாகமத் தெளிவு

## ஆலயம்

ஆன்மாக்கள் அநாதியே ஆணவ பந்தமுள்ளவை. ஆணவத்தால் ஆன்மாக்களின் இயற்கையான அறிவு இச்சை செயல்கள் தடைப்பட்டு, அவை மூடமாய்க் கிடந்தன.

பேரருளாளராகிய சிவபெருமான் தமது பெருங்கருணையால், ஆன்மாக்களின் பந்தத்தை நீக்கி, அவைகளின் அறிவிச்சை செயல்களை விளக்கி, அவைகளுக்குத் தமது இன்பத்தைக் கொடுக்கக் கருதி தமது அருட்சக்தியால் உலகத்தையும் உடலையும் அவைகளுக்குச் சிருஷ்டித்துக் கொடுத்தார். அவற்றைப் பொருந்தித் தமதறிவிச்சை செயல்கள் விளங்கப்பெற்ற ஆன்மாக்கள், நன்றியறிதலாகக் கடவுளை வழிபட வேண்டுவது அவசியம். கடவுளை வழிபடுதற்குரிய இடம் சிவாலயம்.

"கண்டதொரு மந்திரத்தாற் காட்டத்தி லங்கிவே
றுண்டல்போ னின்றங் குளதாமாற் — கண்டவுருத்
தானதுவா யன்றாநன் றானதுவாய்த் தோன்றானே
தானதுவாய்க் காணுந் தவர்க்கு.

— சிவஞானபோதம்.

விறகினிடத்தில் தீ எப்பொழுதும் உண்டு; ஆயினும் கடைகோலினால் கடைந்தவிடத்து அந்தத் தீயானது விறகில் நின்றும் வேறாய் விளங்கித் தோன்றும்; கடையாதவிடத்து விளங்கித் தோன்றுவதில்லை; தோன்றாதது கொண்டு விறகில் தீஇல்லையென அறிவுடையார் எண்ணார். அதுபோல் உயிர்களுக்குப் போக மோக்ஷங்களைக் கொடுத்தற் பொருட்டுக் காணப்பட்ட தாவரவடிவின்கண் முதல்வன் கலப்பினால் அவ்வடிவமே தானாயும், பொருளின் தன்மையால் அவ்வடிவத்தின் வேறாயும் நிற்கும் இயல்புடையன். இவ் விருநிலைகளுள் அவ்வடிவத்தையே சிவபெருமானாகக் காணாதார்க்கு, அவர் தம்மால் அறியப்பட்டதாகிய

ஒரு மந்திரக் கிரியையுள்ள அவ்வடிவத்தில் விளங்கித்தோன்றி, மந்திரக்கிரியை யில்லாதவிடத்து விளங்காது நிற்பன்.

மந்திரக்கிரியை நிறைந்து சிவலிங்கத் திருமேனிகொண்டு விளங்கும் இடம் சிவாலயம் இறைவனுக்குச் சரீரம் போன்றது. அது ஆன்மாக்கள் தம்மைப் பந்தித்த ஆணவ மலவலி ஒடுங்கப் பெற்றுப் பேரன்புடன் மனோவாக்குக் காயங்களென்னும் திரிகரணங்களாலும் முறையே சிந்தித்து வாழ்த்தி வணங்கி அருண் ஞானமடைந்து இறைவனிடத்து ஒடுங்குவதற்குச் சாதனமான இடமாகும்.

प्रासादं भवनं सद्म गृहं धाम निकेतनम् ।
विमानं सदनं हर्म्यं वासो मन्दिर मालयम् ॥
निलयस्त्विति विख्यातास्तस्य पर्याय वाचकाः ।

— காரணாகமம்.

ப்ராஸாதம், பவனம், சதம், கிருஹம், தாம, நிகேதனம், விமானம், ஸதனம், ஹர்ம்யம், வாசச், மந்திரம், ஆலயம், நிலயம் என்பவை ஆலயத்தின் பர்யாயப் பெயர்கள்.

ஆலயத்தை நிர்மாணம் செய்வதற்குரியதான அளவுகள் மானாங்குலம், மாத்ராங்குலம், தேஹலப்தாங்குலம் என்று மூன்று விதமாகும். கூறையின் இடுக்கின்வழியாக வரும் சூரியரச்மியில் காணப்பட்டதும் காணப்படாததுமான தூளியே பரமாணுவாகும். இதை எட்டு எட்டாக ரேணு, ரோம, கஷீக்ஷு, யூகம், யவம் என்று பெருக்கினால், அந்த அளவுதான் மானாங்குலமாகும். இந்த மானாங்குலமானது பன்னிரண்டு கொண்டதற்கு தாலம் என்றும், 24 அங்குலம் கொண்டதற்கு கிஷ்கு என்றும், 25 அங்குல முள்ளதற்கு ப்ராஜாபத்யம் என்றும், 26 அங்குலம் கொண்டதற்கு தனுர்முஷ்டி என்றும், 27 அங்குலமுள்ளதற்கு தனுர்க்கிரஹம் என்றும் பெயர்.

படுக்கை, ஆஸனம் இவைகளை கிஷ்கு என்ற அளவினாலும், ப்ராஸாதம், சபை, சாலை, மண்டபம், வீடு இவைகளை ப்ராஜாபத்யம் என்ற அளவினாலும், ராஜதானி, அரண்மனை, குளம், துர்க்காலயம் இவைகளை தனுர்முஷ்டி என்ற அளவினாலும், ஆறு, சாலை இவைகளை தநுர்க்கிரஹம் என்ற அளவினாலும் செய்ய வேண்டும். மாத்ராங்குலம் என்பது, வலதுகையின் நடுவிரலில்

உள்ள நடுப்பர்வாவின் அளவு. யாகோபகரணங்கள் குண்டம் மண்டலம் வேதிகை யாவும் இந்த மாத்ராங்குலத்தினுல் செய்ய வேண்டும்.

தாலக் கணக்கில் பிரித்து விக்ரஹங்கள் செய்வதற்கு உப யோகப்படுவது தேஹலப்தாங்குலம் எனப்படும். உத்தம தசதா லத்திற்கு அங்குலம் 124. இதை நான்கு நான்காய்க் குறைத்து மூன்று தாலம் வரையில் பரமேச்வரன் முதல் கின்னரர் வரையில் சகள பேதங்களைச் செய்யவேண்டும்.

மற்றும் இதன் அளவுகள் மானம், ப்ரமாணம், உன்மானம், உபமானம், பரிமாணம், லம்பமானம் என்று ஆறு வகையாகக் காணப்படுகின்றன.

मानहीने महाव्याधिरधिके शत्रुवर्धनम् ।
नाहहीने विनशंस्यात् तद्वृद्धि स्याक्षयंकरम् ॥
प्रमाणहीने दारिद्र्यमधिके दारनाशनम् ।
लंबमान विहीनेतु राजराष्ट्रस्य दोषकृत् ॥
उपमानाधिके हीने शिल्पिनं हन्ति देशिकम् ।
सर्वलक्षण युक्तंचेत् सर्वसिद्धि प्रदायकम् ॥

ஆலயங்களும், ப்ரதிமைகளும் அததற்குரிய அளவுடன் செய்யவேண்டும். அளவு அதிகமானுல் வியாதி உண்டாகும். குறைவானுல் சத்ருவிருத்தியுண்டாகும் என்று கூறப்படுவதால் அளவில் மிகவும் கவனம் செலுத்தவேண்டும்.

சிவாலயம் செங்கல், வெண்கல், கருங்கல், நீறு, மணல், நீர், காரம் என்னும் ஏழுவகைப் பொருள்களாலானது. அவை தோல், இரத்தம், மாம்சம், எலும்பு, மஜ்ஜை, மேதை, சுக்லம், என்ற எழுவகைத் தாதுக்களைக் குறிக்கும்.

மற்றும் ஆலயம் சரீரப்ரஸ்தாரம் என்றும் இருதயப்ரஸ்தாரம் என்றும் இருவகைப்படும். சரீரப்ரஸ்தாரமாவது சரீரத்தின் உறுப்புக்களைப்போன்ற பகுதிப்புகளுடன் கூடியது. அதாவது

கர்ப்பக்கிரஹம் தலையாகும். அர்த்தமண்டபம் கழுத்தாகும், மஹா மண்டபம் மார்பாகும், யாகசாலை நாபியாகும், கோபுரம் பாதமாகும்.

नागरं द्राविडं चैव वेसरं च त्रिधा भवेत् ।
भूम्यादि स्थूपि प ्ंन्तं युगाश्रं द्राविडं भवेत् ॥
वेदिप्रभृति चश्टाश्रं द्राविडं चेति कीर्त्तित ।
कर्णप्रभृति वृत्तं यत् वेसरं परिकीर्त्तितम ॥

— காரணாகமம்.

கர்ப்பக்கிரஹத்தின்மேல் கட்டப்படும் விமானம் நாகரம், த்ராவிடம், வேசரம் என்று மூன்று விதமாகும். அதாவது பூமி முதல் ஸ்தூபி வகையில் நாற்கோணமாக விருக்கும் விமானத்திற்கு நாகரம் என்றும், வேதி முதல் ஸ்தூபி வரையில் எண் கோணமாகவுள்ள விமானத்திற்கு த்ராவிடம் என்றும், கர்ணம் முதல் ஸ்தூபிவரையில் விருத்தமாகவுள்ள விமானம் வேசரம் என்றும் பெயர்பெறும்.

ப்ரஸ்தாரத்தின் கோணங்களில் பூதமாவது விருஷபமாவது கட்டவேண்டும். பூதமாயின் அஞ்சலிசெய்துகொண்டு உட்கார்ந்தவாறும், விருஷபமாயின் படுத்துக்கொண்டிருப்பதாயும் செய்ய வேண்டும். லக்ஷணமாய் இருக்கவேண்டும்.

கோவில் கட்டுவதற்கும், பிம்பங்கள் செய்வதற்கும் இளம் கல், முதிர்ந்தகல் கூடா. யௌவனமான சிலையே சிறந்தது. தீர்க்கமான த்வனியை உடைய சிலை, முதிர்ந்த சிலை. குறைவான ஒலி உடைய சிலை இளமையானது. மற்றும் புருஷ சிலையால் புருஷ விக்ரஹங்களையும் ஸ்த்ரீ சிலையால் தேவிவிக்ரஹங்களையும், பீடங்களையும் நபும்ஸகசிலையால், பித்திகள் தளவரிசைகள் முதலியவைகளை அமைக்கவேண்டும். புருஷ சிலையினல் செய்யப்பட்ட பீடம் முதலியன ராஜராஷ்ட்ரத்தையழிக்கும். பெண் சிலையால் செய்யப்பட்ட ஆண்பிம்பம் எல்லா ப்ராணிகளுக்கும் பயத்தை உண்டாக்கும். நபும்சக சிலையால் செய்யப்பட்ட பீடம், துர்பிக்ஷ முண்டாக்குவதுடன் யஜமானனை நாசம்செய்யும். மற்றும் ரேகை, களங்கம் இவை நீக்கிச் சுத்தமான கற்களைப் பரீக்ஷித்து எடுத்து ஆலயம், பீடம், பிம்பம் முதலியவைகள் அமைக்கவேண்டும்.

( தொடரும் )

# தமிழ் கூறு நல்லுலகம்

திரு. அ. கலியபெருமாள், எம். ஏ.,

(மலர் 24, இதழ் 4, பக்கம் 216 இன் தொடர்ச்சி)

யவன தேசத்தினின்றும் தமிழகம் வந்து தச்சர்கள் கட்டிட வேலைகளில் ஈடுபட்டிருந்தனர். மணிமேகலை கூறும் பசும்பொன் மண்டபத்தை உருவாக்கிய கலைஞர்களுள் யவனத் தச்சரும் இருக்கக் காண்கிறோம்.

" மகத வினைஞரும் மராட்டக் கம்மரும்
அவந்திக் கொல்லரும் யவனத் தச்சரும்
தண்டமிழ் வினைஞர் தம்மொடுங் கூடிக்
கொண்டினி தியற்றிய "

(சிறைக்கோட்டம் அறக்கோட்டமாக்கிய காதை)

மண்டபம் என்று கூறுகிறார் சாத்தனார்.

வலிய உடற்கட்டு வாய்க்கப்பெற்றோர் யவனர். அன்னாரைத் தமிழ்நாட்டு வேந்தர் காவலுக்கு அமர்த்தியதில் வியப்பொன்றுமில்லை. காவலிற் சிறந்தவர் யவனர் என்பதைச் சிலப்பதிகாரத்தால் அறியலாம். மதுரைமாநகர் மதில்வாயில்காக்கும் யவனரை,

" கடிமதில் வாயில் காவலிற் சிறந்த
அடல்வாள் யவனர் "

(ஊர்காண் காதை 66-67)

என்று இளங்கோவடிகள் குறிப்பிடுகிறார். வலிய யவனர், நிலத்தில் புரளும்படி நீண்ட அங்கி அணிந்த உடையின் வெருவரு தோற்றத்தினர் என்பதை முல்லைப் பாட்டால் அறியலாம்.

" மத்திகை வளைஇய மறிந்துவீங்கு செறிவுடை
மெய்ப்பை புக்க வெருவரு தோற்றத்து
வலிபுணர் யாக்கை வன்கண் யவனர் "

(முல்லைப் 59-61)

யவனர் கள்ளுண்டு மகிழ்ந்து, ஆறுகிடந்தன்ன அகன்றதெருவில் மேலே விழும் மழைத்துளியையும் பொருட்படுத்தாது காவல் காத்துத் திரிவதை நக்கிரர் காட்டுகிறார்.

" ஆறுகிடந்தன்ன அகல்நெடுந் தெருவில்
படலைக்கண்ணிப் பரேஎர் எறுழ்த் திணிதோள்
முடலை யாக்கை முழுவலி மாக்கள்
வண்டு மூசு தேறல் மாந்தி மகிழ்சிறந்து
துவலைத் தண்டுளி பேணார் பகலிறந்து
இருகோட்டறுவையர் வேண்டுவயின் திரிதர "

(நெடுநல். 30-35)

காவிரிப்பூம் பட்டினத்தில் யவனர் வாழும் பகுதி என்றே ஒன்று தனியாக இருந்தது. அவ்விருக்கை, துறைமுகப் பக்கம் அமைந்திருந்தது.

அப்பக்கம் செல்வார்தம் கண்களைத் தன்பால் ஈர்த்து மேற் செல்ல விடாமல் தடுக்கும் பயன் தொலையா இருக்கையாக அது விளங்கியது. இதனை இந்திரவிழவூரெடுத்த காதையில்,

" கயவாய் மருங்கின் காண்போர்த் தடுக்கும்
பயனற வறியா யவன ரிருக்கையும் "

என்னும் அடிகளால் அறியலாம். யவனர் முதலிய மொழி பெயர் தேயத்தார் புகாரில் ஒன்றுகூடி வாழ்வதைப் பட்டினப் பாலையும்,

" மொழிபல பெருகிய பழிதீர் தேஎத்துப்
புலம்பெயர் மாக்கள் கலந்தினிதுறையும்
முட்டாச் சிறப்பின் பட்டினம் "

(பட்டினப். 216-18)

என்று கூறுதல் காண்க.

வெளி நாடுகளிலிருந்து வரும் கலங்கள் திசையறிந்து கரை சேரத் தமிழ் நாட்டின் முக்கிய பட்டினங்களில் கலங்கரை விளக்கங்கள் இருந்தன. கலங்கள் திசைதடுமாறிப் போகாமல் கரை சேர்தற்காக அமைந்த விளக்கை, "கலங்கரை விளக்கம்" என்ற பொருள் பொதிந்த சொல்லால் குறித்த தமிழர்தம் அறிவின் திறம் என்னே. கரைதல் எனின் அழைத்தலாம். கலத்தைத் திசையறிவித்துக் கரைக்கு அழைக்கும் விளக்கம் என விரியும். பூம்புகாரிலிருந்த கலங்கரை விளக்கத்தை, "இலங்குநீர் வரைப்பில் கலங்கரை விளக்கம" என்று குறிக்கிறார் இளங்கோ. கலங்கரை விளக்கம் என்பதற்குப் பழைய உரையாசிரியர் "திக்குக்குறி காட்டிக் கலத்தை அழைக்கிற விளக்கம்" என்று உரையெழுதுகிறார். அடியார்க்கு நல்லாரும் இவ்வடிக்குப் "பாடை வேறுபட்டதேயத்து நிலையறியாது ஓடுங் கலங்களை அழைத்தற்கு இட்ட விளக்குகள்" என்று பொருள் தருகிறார். பெரும்பாணாற்றுப் படையும் கலங்கரை விளக்கம் பற்றிப் பேசுகிறது. இரவில் கொளுத்திய விளக்கம், கடலில் நாம் சேரும் துறையன்று என, ஓடும் கலங்களை வேறு துறைக்கண் செல்லவிடாது இது நம் துறையென்று அழைக்கிறதாம்.

> " இரவின் மாட்டிய இலங்குசுடர் ஞெகிழி
> உரவுநீர் அழுவத்து ஓடுகலம் கரையும்
> துறை !' (பெரும்பாண் 339-51)

அப்பாடலில் கலங்கரை விளக்கம் பற்றி ஒரு குறிப்பு. அலை உறங்காப் பெருங்கடலில் ஆடி அசைந்து வருகிறது வங்கம்' உலகெழுந்தாற் போன்ற அச்சந்தரும் நாவாய் அது. அல்லும் எல்லும் சோம்பலின்றி விரைந்தேகும் காற்று அசைப்பக் கரையிலே நின்று கரையும் விளக்கம் கண்டு திசையறிந்து மீகாமன் கலத்தைச் செலுத்துகிறான். மருதன் இளநாகனார் பாடல் இதோ.

> " உலகு கிளர்ந்தன்ன உருகெழு வங்கம்
> புலவுத்திரைப் பெருங்கடல் நீரிடைப் போழ
> விரைசெலல் இயற்கை வங்கூழ் ஆட்டக்
> கோடுயர் திணிமணல் அகன்துறை நீகான்
> மாட ஒள்ளெரி மருங்கறிந் தொய்ய "
>
> (அகம். 255)

தமிழகத்துப் பட்டினங்களில் பெரும்பெரும் பண்டசாலை கள் இருந்தன. அப்பண்டசாலைகளில் இறக்கப்பட்ட பண்டங் களும், ஏற்றப்பட இருக்கும், பண்டங்களும் மலைபோல் குவிந்து கிடந்தன. அதனை எல்லையும் இரவும் அயராது காவல் புரிந் தனர் அடல் மறவர். நெடிதுயர்ந்து நிற்கும் பண்டசாலையை வீரர் காவல் புரிவதைக் கடியலூர் உருத்திரங்கண்ணனார் “சிலதர்காக்கும் சேணுயர் வரைப்பு” என்று குறிப்பிடுகின்றார்

புகார்த்துறை முகத்துப்பண்டசாலை பெரும்புகழ்வாய்ந்தது. கலத்தில் ஏற்றுதற்காக வந்த பண்டங்களும் இறக்கப்பட்ட பண்டங்களும் ஏராளமாகக் குவிந்து கிடப்பதால் கெட்டுப் போகாவண்ணம் அரிய காவலை உடையதாக இருக்கிறது. அங்கே குவிக்கப்பட்டுள்ள பண்டங்களின் தோற்றம் மலையை யும் அஞ்சச் செய்கிறது. அப்பொதிகளின்மீது ஏறி ஆட்டுக் கிடாயும் ஏறும் குதித்து விளையாடுகின்றன. அது. மலையிடத்து வருடைமான் உலாவும் காட்சியைக் கவிஞருக்கு நினைவுபடுத்து கிறது.

“நீரினின்று நிலத்தேற்றவும்
நிலத்தினின்று நீர்பரப்பவும்
அளந்தறியாப் பலபண்டம்
வரம்பறியாமை வந்தீண்டி
அருங்கடிப் பெருங்காப்பின்
வலியுடை வல்லணங்கினோன்
புலிபொறித்துப் புறம் போக்கி
மதிநிறைந்த மலி பண்டம்
பொதி மூடைப் போரேறி
மழையாடு சிமைய மால்வரைக் கவாஅன்
வரையாடு வருடைத் தோற்றம்போலக்
கூருகிர் ஞமலிக் கொடுந்தா ளேற்றை
ஏழகத்தகரோடு களும் முன்றில்”

(பட்டினப் 129-141)

சுற்றுத்துறை போகிய கவிஞராலேயே சொற்களில் இறுக்க இயலாதவாறு அளந்தறியாப் பண்டங்கள் எல்லை அறியாதபடி வந்து குவிந்து கிடக்கின்றனவாம். (தொடரும்.)

# செய்திகள்

## கருங்குயில்நாதன்பேட்டையில்

## மகாகும்பாபிஷேகம்

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனத்திற்குச் சொந்தமான கருங்குயில்நாதன்பேட்டை ஸ்ரீ சக்திபுரீசுவரசுவாமி தேவஸ்தானத்தில் ஸ்ரீ ஆனந்தவல்லியம்பாள் சமேத ஸ்ரீ சக்திபுரீசுவர சுவாமிக்கு விநாயகர் முதலிய பரிவாரங்களுடன் ஜீர்ணோத்தாரண அஷ்டபந்தன மகாகும்பாபிஷேகம் 28—4—65 புதன்கிழமை காலை 9-30 மணிக்குச் சிறப்பாக நடைபெற்றது.

கருங்குயில்நாதன்பேட்டை மாயூரத்திற்குக் கிழக்கே காவிரிப்பூம்பட்டினம் கற்சாலையில், காவிரியின் வடகரையில் மூர்த்தி, தலம், தீர்த்தம் மூன்றாலும் சிறப்புற்று விளங்குகிறது. இத்தலத்திற்குக் கருணாபுரம் என்ற ஒரு பெயரும் வழங்குகிறது. சப்த மாதாக்களில் மகேசுவரியாலும், வராகியாலும் பூசிக்கப் பெற்ற சிறப்புடையது. தக்கன் யாகத்திற்குச் சென்ற இந்திரன் தன் தெய்வத் தன்மை யிழந்து கருங்குயில் வடிவம் பெற்றான். இங்கு உள்ள கருணாதீர்த்தத்தில் நீராடி வழிபட்டு இறையருளால் கருங்குயில் வடிவம் நீங்கப்பெற்றான். இத் தலம் கருங்குயில்நாதன் பேட்டை என வழங்கவேண்டும் என்று இறைவனை வேண்டி வரம் பெற்றான். அதுமுதல் இத்தலம் கருங்குயில்நாதன்பேட்டை என்று வழங்கப்பெறுகிறது.

இத் திருக்கோயிலில் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி அவர்கள் அருளாணையால் விமானங்கள் புதுப்பித்து, சண்டிகேசுவரர் விமானமும், திருமாளிகைப்பத்தி மண்டபமும் புதிதாகக் கட்டி, சுவாமிகோயில் அர்த்தமண்டபம், மகாமண்டபம், வெளிமண்டபம் முதலியன கருங்கல் தளவரிசையிட்டு, கோபுரவாயில், சுவாமி அம்பாள் சந்நிதியில் சுதையில் திருவுருவங்கள் அமைத்து, காவிரிப்பூம்பட்டினம் கற்சாலையில் வளைவு (ஆர்ச்), பக்கச் சுவர்கள் கட்டி, வர்ணங்கள் தீட்டி, திருப்பணி நிறைவேற்று.

கோயில் முன்புறம் அழகிய முகப்புடன் பந்தல் அமைக்கப் பெற்றது. கோயிலின் வடமேற்குமூலையில் யாகசாலை சிறந்த முறையில் மண்டப அமைப்பில் கட்டப்பெற்றது. 25—4—65 ஞாயிற்றுக்கிழமை காலை யாகசாலாப்ரவேசமும், மாலை யாகசாலை முதற்காலபூஜையும் தொடங்கி 28—4—65 காலையுடன் ஆறுகால பூஜைகள் நிறைவேறின. வேதசிவாகம பாராயணம், திருமுறைப் பாராயணம் முதலியன நாள்தோறும் சிறப்புற நிகழ்ந்தன.

ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்கள் மகாகும்பாபிஷேக தரிசனத்திற்கு எழுந்தருளினார்கள். உரிய காலத்தில் மகாபூர்ணாகுதி செய்யப்பெற்றது. அதிர்வேட்டுக்கள் ஒலிக்க, மங்கலவாத்தியங்கள் இன்னிசை எழுப்ப, அர அர முழக்கம் முழங்க கடம் எழுந்தருளியாயிற்று. கடங்கள் உரிய இடத்தை அடைந்ததும் சுமார் 9-30 மணியளவில் மகாகும்பாபிஷேகம் சிறப்புற நடைபெற்றது. ஆயிரக்கணக்கான மக்கள் குழுமியிருந்து கண்டு களித்தனர்.

ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்கட்கு மணக்குடி வார வழிபாட்டுக் கழகச் சார்பில் பாராட்டுரை ஒன்று வாசித்தளிக்கப்பெற்றது. மாலையில் மகாபிஷேகமும், இரவு பஞ்சமூர்த்திகள் திருவீதியுலாக் காட்சியும் சிறப்புற நிகழ்ந்தன.

### தருமபுரத்தில்

## திருநாவுக்கரசு நாயனார் குருபூசைத் திருநாள்

26—4—65 திங்கட்கிழமை ஸ்ரீ திருநாவுக்கரசு நாயனார் திருநக்ஷத்திரமாகிய சதயத் திருநாள். அன்று தருமபுரம் ஸ்ரீ ஞானபுரீசுவரசுவாமி திருக்கோயிலில் ஸ்ரீ திருநாவுக்கரசு நாயனாருக்கு விசேஷ அபிஷேக ஆராதனைகள் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்கள் அருளாணையால் சிறப்புற நிகழ்ந்தன. மாலை ஆதீனத் தேவாரப் பாடசாலை ஆசிரியர் திரு. ஆர். வேலாயுத ஓதுவார் அவர்கள் குழுவினரால் "திருநாவுக்கரசர் அருள் வரலாறு" கதாகாலக்ஷேபமாகச் செய்யப்பெற்றது.

பின்னர், இரவு வெள்ளிப் பல்லக்கில் ஸ்ரீ திருநாவுக்கரசு சுவாமிகள் திருவீதியுலா நிகழ்ந்தது. வீதியுலாவில் நாயனாரது அற்புத விளக்கச் சொற்பொழிவுகள் ஆதீனப் பல்கலைக் கல்லூரிப் பேராசிரியர்கள் முதலியவர்களால் நிகழ்த்தப்பட்டன. ஓதுவாமூர்த்திகளால் தக்க இன்னிசைக் கருவிகளுடன் அற்புதத் திருப்பதிகங்கள் ஓதப்பெற்றன. திருக்கயிலாய நிலையத்திற்கு ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்கள் எழுந்தருளி வழிபாடு

செய்து ஓதுவாமூர்த்திகள் முதலானவர்களுக்குப் பால் முதலியன வழங்கச் செய்தருளினார்கள்.

## தருமையாதீன தேவஸ்தானங்களில் சித்திரைத்திங்கட் திருவிழா

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனத்திற்குச் சொந்தமான தேவஸ்தானங்களில், சீகாழி ஸ்ரீ சட்டைநாதசுவாமி தேவஸ்தானம், திருவையாறு ஸ்ரீ பஞ்சநதீசுவரசுவாமி தேவஸ்தானம், திருக்கடவூர் ஸ்ரீ அமிர்தகடேசுவரசுவாமி தேவஸ்தானம் ஆகிய திருக்கோயில்களில் சித்திரைத்திங்கட் திருவிழா 4—5—65 செவ்வாய்க்கிழமை முதல் தொடங்கி 13—5—65 முடிய உள்ள நாட்களில் மிகச் சிறப்புடன் நடைபெறுகிறது.

சீகாழியில் :-

5—5—65 அன்று திருமுலைப்பால் திருவிழாவும், 9—5—65 அன்று திருக்கல்யாணத் திருவிழாவும், 11, 12—5—65 ஆகிய இருநாட்களிலும் திருத்தேர்த் திருவிழாவும், 15—5—65 அன்று தீர்த்தங்கொடுத்தலும் நடைபெறுகிறது. திருவிழா நாட்களில் சிறந்த அறிஞர்களின் சமயச் சொற்பொழிவுகளும், இன்னிசை நிகழ்ச்சிகளும் நாள்தோறும் மாலையில் ஸ்ரீ திருஞானசம்பந்தர் திருக்கோயிலில் நடைபெறுகின்றன.

5—5—65 அன்று திருமுலைப்பால் திருவிழா. அன்று காலை திருஞானசம்பந்தர் பிரமதீர்த்தக்கரைக்கு எழுந்தருளுதலும், பெருமான் திருமுலைப்பால் அருளச்செய்து, காட்சி வழங்குதலும் சம்பந்தர் பதிகம் பாடத்தொடங்குதலும் ஆகிய ஐதிகத் திருவிழா நடைபெற்றது. அன்று ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்கள் எழுந்தருளினார்கள். சம்பந்தர் பிரமதீர்த்தக்கரைக்கு எழுந்தருளும்போது அற்புத விளக்கச் சொற்பொழிவுகள் நடைபெற்றன. சென்னை. இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் திரு. எம். எஸ். சாரங்கபாணி முதலியார் பி. ஏ., பி. எல்., அவர்களும் வந்து விழாவில் கலந்துகொண்டார்கள். அறநிலையத் துறைத் துணை ஆணையர் திரு. ஏ. மார்க்கண்டவேல்ராஜன் அவர்கள் அற்புத விளக்கச் சொற்பொழிவைத் தொடங்கிவைத்தார்கள். சென்னை, 'கலைமகள்' ஆசிரியர், செந்தமிழ்ச்செல்வர், வித்துவான், திரு. கி. வா. ஜகந்நாதன் எம். ஏ., அவர்களும், திருவாசகமணி, திரு. கே. எம். பாலசுப்பிரமணியம் பி.ஏ., பி எல்., அவர்களும், அண்ணாமலைப் பல்கலைக் கழக மொழியாராய்ச்சித் துறைத் தலைவர், பல்கலைச் செல்வர், வித்துவான், திரு. டி. பி. மீனாக்ஷிசுந்தரம் பிள்ளை அவர்களும் கலந்துகொண்டு அற்புத

விளக்கச் சொற்பொழிவாற்றினர். திருமுலைப்பால் விழாவிற்கு பல ஊர்களிலிருந்தும் அன்பர்கள் பலர் திரளாக வந்து, பாலை நிவேதனத்திற்குக் கொடுத்து பெற்று தரிசித்துச் சென்றனர். ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்கள் பிரசாதங்கள் வைக்கப்பெற்ற துணிப் பைகளை அன்பர்களுக்கு வழங்கி ஆசியருளி தருமைக்கு எழுந்தருளினார்கள்.

10—5—65 திங்கட்கிழமை திருமுறை விழாவும் தேவார வகுப்பு ஆண்டு விழாவும் நடைபெற்றன. தேவார வகுப்பு மாணவர்களுக்குப் பரிசுகள் வழங்கப்பட்டன. பண்ணிசை வாணர்களின் திருமுறைப் பாராயணத்தொடு, யானைமேல் திருமுறைகள் திருவீதியுலா நிகழ்ந்தது.

திருவையாற்றில் :-

சித்திரைத்திங்களில் நடைபெறும் திருவிழாவில் 8—5—65 சனிக்கிழமை யன்று தன்னைத்தான் பூஜித்தல். அன்று ஆறு ஊர் சுவாமிகளும் எழுந்தருளல், பெருமான் இடபவாகனத்தில் எழுந்தருளி மாகேஸ்வரபூஜை செய்தல் ஆகியவை சிறப்புற நிகழ்ந்தன. 15—5—65 அன்று ஏழூர் வலம் வருதல் (சப்தஸ்தானம்). இவ்விழா ஐயாற்றில் நிகழும். விழாக்களில் மிகச் சிறப்புடையது. அன்பர்கள் பலர் மிக்க பக்தியுடன் சுவாமியுடன் ஏழூர் வலம் வருதல் ஒப்பற்ற காட்சியாய்த் திகழும். விழா நாட்களில் பல அறிஞர்களின் சமயச் சொற்பொழிவுகள், இன்னிசைச் சொற்பொழிவு முதலியன சிறப்புற நடைபெற்றன.

திருக்கடவூரில் :-

சித்திரைத்திங்கட் திருவிழாவில் 6—5—65 வியாழக்கிழமை திருக்கல்யாண மகோற்சவமும், 9—5—65 ஞாயிற்றுக்கிழமை மார்க்கண்டேயருக்காகப் பெருமான் காலனைஉதைத்தவரலாற்று விளக்கமாக நிகழும் விழாவாகிய காலசம்காரமும் நடைபெற்றன. 11—5—65 செவ்வாய்க்கிழமை திருத்தேர் விழாவும், 13—5—65 வியாழக்கிழமை தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும். காலசம்கார தரிசனத்திற்கு பல இடங்களிலுமிருந்தும் அன்பர்கள் பலர் வந்து தரிசித்து உய்ந்தனர். ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்கள் 9—5—65 ஞாயிற்றுக்கிழமையன்று திருக்கடவூருக்கு எழுந்தருளி ஸ்ரீ அமிர்தகடேசப் பெருமானையும் ஸ்ரீ அபிராமி அம்பிகையையும் வழிபட்டு ஸ்ரீ காலசம்கார தரிசனம் புரிந்தார்கள். காலசம்காரத்திற்கு வந்திருந்த அன்பர்களுக்கு

விபூதிப் பிரசாதம், காலசம்கார வரலாற்று விளக்கம் அமைந்த போல்டர் இவை வைக்கப்பெற்ற துணிப் பைகளை வழங்கியருளி தருமைக்கு எழுந்தருளினர்கள்.

விழா நாட்களில் சமயச் சொற்பொழிவுகள் அறிஞர்கள் பலரால் நிகழ்த்தப்பெற்றன. இன்னிசை, கதாகாலக்ஷேபம் முதலியனவும் நடைபெற்றன. அன்பர்கள் பலர் கேட்டு மகிழ்ந்தனர்.

## சென்னை, தருமபுர ஆதீன மடாலய தேவாலய சமயப் பிரசார நிலையத்தில்

## மார்கழிமாதத் திருவீதி பாராயண நிறைவுவிழா

நிலைய அன்பர்களும், திருமுறை வகுப்பு ஆசிரியர் மாணவர்களும் மார்கழிமாதம் முழுவதும் விடியற்காலையில் திருப்பள்ளி எழுச்சி, திருவெம்பாவை, திருமுறைப் பாராயண பஜனை செய்து கொண்டு திருவீதிவலம் வந்தனர். அந்நிகழ்ச்சியின் நிறைவு விழா 14—1—65 விடியற்காலை வித்துவான் ஸ்ரீமத் சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் தலைமையில் நிலையப் பிரார்த்தனை மண்டபத்தில் நடைபெற்றது, திரு. பி. சுவாமிநாதன் அவர்களும், திருமுறை வகுப்புக் குழந்தைகளும் திருமுறை, திருப்புகழ்ப் பஜனை நிகழ்த்தினர். சுவாமிகள், விடியற்காலையில் துயிலெழுவதாலும், நீராடி இறைவனைத் துதிப்பதாலும் உண்டாகும் நன்மைகளை எடுத்துக் கூறினர்கள். திரு. எம். ஆர். தாமோதரன், திரு. கே. சி. நாகலிங்க முதலியார், திரு. கே. கமலக்கண்ணன் எம். எல். சி., டாக்டர். சி. பி. பாலசுப்பிரமணியம், திரு. எஸ். சாம்பசிவ அய்யர், திரு. டி, என். உடையநம்பி நாடார், திரு. எஸ். பி. ஹசன் முதலியோர் வீதிவலத்தில் கலந்துகொண்டும், ஆராதனை உபயத்தில் பங்குகொண்டும், குழந்தைகட்குப் புத்தகம், நோட்டு முதலியன பரிசளித்தும் சிறப்பித்தார்கள், அனைவருக்கும் சுவாமிகள், நன்றி தெரிவித்து வாழ்த்தினர்கள்.

## பொங்கல் புதுநாள் விழா

நிலைய மன்றத்தில் 14—1—65 மாலை 7 மணிக்குச் சென்னை மாநில முன்னாள் சர்வீஸ் கமிஷன் தலைவர், திரு. வி. இரத்தின முதலியார் அவர்கள் தலைமையில் பொங்கல் புதுநாள் விழாவும்,

வேளூர்க் கிருத்திகைப் பிரசாதம் வழங்கும் விழாவும், சோழ நாட்டுக் காவிரி வடகரை மேற்குப் பகுதித் தலங்களின் பிரசாதம் வழங்கும் விழாவும் நடைபெற்றன. திரு. பி. சுவாமிநாதன் அவர்களும், திருமுறை வகுப்பு மாணவ மாணவியர்களும் சிவ நாம பஜனை மூலமாகக் கடவுள் வணக்கம் நிகழ்த்தினார்கள். பைந்தமிழ்ச்செல்வர், திரு. ச, சிவகுமாரன் எம். ஏ., அவர்கள் பொங்கல் சிறப்புப்பற்றிப் போரூர் சிதம்பர சுவாமிகள் இயற்றிய ஒரு பாடல் மூலம் விளக்கம் செய்தார்கள். தாம்பரம் கிறித்தவர் கல்லூரித் தமிழ் விரிவுரையாளர், திரு. எஸ். வடிவேலாயுதனார் அவர்கள் பொங்கல் புதுநாள் என்பதுபற்றி அரியதொரு விரிவுரையாற்றினார்கள். தலைவர் அவர்கள் தமது தலைமையுரையில் நமது முன்னோர்காலந்தொட்டு நடைபெற்றுவரும் விழாக்கள் ஒவ்வொன்றிலும் பல உண்மைகள் நிறைந்துள்ளன என்றும், இப் பொங்கல் விழா இறைவனருளால் விளைந்த பொருள்களை முதலில் அவனிடம் அறிவித்து நன்றியைப் புலப்படுத்தும் முறையில் அமைந்துள்ளது என்றும், இறைவனுக்குமட்டுமல்லாது இறையருளால் நமக்கு உதவிய இந்திரன், சூரியன் முதலிய தேவதைகட்கும், பசு, எருது முதலியவைகட்கும் நன்றியைப் புலப்படுத்தும் முறையில் அமைந்துள்ளது என்றும், தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்கள், திருக்கோயில்களை ஆகமமுறைப்படித் தூயதாக நடத்துவதோடு, இந் நிலைய வாயிலாகப் பல நல்ல காரியங்கள் நிகழ்த்துவது போற்றத்தக்கது என்றும், நிலையச் சோழநாட்டு யாத்திரையில் தாமும் கலந்துகொண்டபோது இதன் பணி இனிது விளங்கியது என்றும் குறிப்பிட்டார்கள். வித்துவான், ஸ்ரீமத். சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் வரவேற்புரையும் நன்றியுரையும் கூறினார்கள். திரு. பி. சுவாமிநாதன் கடவுள் வாழ்த்துப் பாடினார்.

## மகாசிவராத்திரி விழா

நிலைய மன்றத்தில் 1—3—65 மாலை மகாசிவராத்திரி விழா திரு. கே. கமலக்கண்ணன் எம். எல். சி., அவர்கள் தலைமையில் சிறப்பாகக் கொண்டாடப்பெற்றது. பிரார்த்தனை மண்டபத்தில் உள்ள ஸ்ரீ கயிலாயநாதருக்குத் திருமுறை அர்ச்சனை புரிந்து வழிபாடு நிகழ்த்தப்பெற்றது. திருமுறை வகுப்பு மாணவியர் கடவுள் வணக்கம் பாடினர். திரு. என். ஆர். முருகவேள் அவர்கள் ''மகாசிவராத்திரி விரதச் சிறப்பு'' என்பதுபற்றி அரியதொரு ஆராய்ச்சியுரை நிகழ்த்தினார்கள். தலைவர் அவர்கள் விரதம் காப்பதாலும், வழிபாட்டினாலும் நாட்டிற்கு உளதாகும்

நன்மைகளை விளக்கினார்கள் வித்துவான் ஸ்ரீமத். சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் வரவேற்புரையும் வாழ்த்துரையும் கூறினார்கள். தேவார இசைமணி, திரு. வே. இலக்குமணன் கடவுள் வாழ்த்துப் பாடினார்.

## வேளூர்க் கிருத்திகைப்பிரசாதம் வழங்கும் விழா

5—4—65 கிருத்திகையன்று நிலைய அன்பர்கள் சார்பில் வைத்தீஸ்வரன்கோயிலில் உள்ள ஸ்ரீ தையல்நாயகியம்பாள் சமேத ஸ்ரீ வைத்தியநாதசுவாமிக்கும், ஸ்ரீ செல்வமுத்துக்குமார சுவாமிக்கும் நிகழ்த்தப்பெற்ற அபிஷேக அர்ச்சனைப் பிரசாதங்கள் 6—4—65 மாலை நிலையத்தில், வழக்கறிஞர் திரு. டி. கே. சுப்பிரமணியப் பிள்ளை பி. ஏ., பி. எல்., அவர்கள் தலைமையில் வேளூர்த் தேவாரப் பிரார்த்தனை நிகழ்த்தி அன்பர்கட்கும், உறுப்பினர்கட்கும் வழங்கப்பெற்றன. திரு. பி. சுவாமிநாதன் பிரார்த்தனை நிகழ்த்தினார்.

## மாதாந்தர சமயப் பிரசார வழிபாடு

நிலையத்தின் மார்ச்சுமாத மாதாந்தர வழிபாடு 28—3—65 ஞாயிற்றுக்கிழமை மாலை 5·30 மணிக்கு மயிலாப்பூர் காரணீசர் கோயில் தெருவில் உள்ள ஸ்ரீ காரணீசுவரர் ஆலயத்தில் சிறப்பாக நடைபெற்றது. வழிபாட்டுக் குழுவினர் சார்பில் சுவாமி அம்பாளுக்கு அபிஷேக ஆராதனை நிகழ்த்தப்பெற்றது. குழுவினர் திருஅங்கமாலைத் திருப்பதிகம் ஓதிக்கொண்டே திருக்கோயில் வலம் வந்து முறையாக வழிபாடாற்றினர். பிறகு சுவாமி சந்நிதியில் வித்துவான் ஸ்ரீமத் சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் தலைமையில் சமயப் பிரசாரம் நடைபெற்றது. வழக்கறிஞர் திரு. டி. கே. சுப்பிரமணியப் பிள்ளை அவர்கள் வரவேற்புரைகூறி கோயில் நிலையையும் விளக்கினார்கள். திருமதி. மீனாட்சிசுந்தரசிவையவர்கள் வழிபாடு என்பது நமது முன்னோர்களாகிய சமயாசாரியர் நால்வர் சென்ற வழியிலே பொருந்தி நிற்றல் என்றும், அதற்கு அவர்கள் அருளிய தேவாரத்தைப் பயிலுதல் அவசியம் என்றும் வற்புறுத்தினார்கள். திரு. புலவர் முருகவேள் அவர்கள் நன்றி நவின்றார்கள். சுவாமிகள் தமது தலைமையுரையில் வேதம் நான்காயினும் அதர்வண வேதத்தை நீக்கி வேதம் மூன்று என்று கொள்வதுமரபென்றும், அம்மூன்றில் நடுவிலுள்ள யஜுர் வேதத்தின் நடுவில் ஸ்ரீருத்திரம் உள்ளது என்றும், ஸ்ரீருத்திரத்தின் நடுவில் ஐந்தெழுத்து உள்ளதென்றும்,

வேதங்களின் நடுவில் ஐந்தெழுத்து உள்ளதுபோல் மூவர் தேவாரத்தின் நடுவில் ஐந்தெழுத்து உள்ளது என்றும், அபிஷேக காலத்தில் ஸ்ரீருத்திரபாராயணம் செய்வதால் அபிஷேகத் தீர்த்தம் புனிதமடைகிறது என்றும், தமிழறிந்தவர்கள் தமிழ் வேதமாகிய தேவாரத்திலுள்ள ஐந்தெழுத்துத் திருப்பதிகத்தை அபிஷேக காலத்தில் ஓதல் நலமென்றும் குறிப்பிட்டார்கள். ஆலயச் சார்பில் தர்மகர்த்தர் திரு. நாராயணசாமி பிள்ளை, குழுவினரை வரவேற்று வழிபாட்டையும் பிரசாரத்தையும் நடத்திக் கொடுத்து நன்றி கூறினர்கள். திரு. பி. சுவாமிநாதன் தேவாரத் திருமுறை ஓதிச் சிறப்பித்தார்.

## வருஷப்பிறப்பு விழா - புலவர் பாராட்டு விழா

சென்னைத் தியாகராயநகரில் உள்ள தருமபுர ஆதீன மடாலய தேவாலய சமயப் பிரசார நிலையத்தில் 13—4—65 மாலை விசுவாவசு வருஷப் பிறப்பு விழாவும், நிகழாண்டில் ஜனதிபதி விருது பெற்ற தருமையாதீனப்புலவர், திரு. க. வச்சிரவேல் முதலியார் பாராட்டு விழாவும், முன்னள் மாவட்டக் கலெக்டர் திரு. ஜி. எம். முத்துசாமிப் பிள்ளை அவர்கள் தலைமையில் சிறப்பாகக் கொண்டாடப்பெற்றது. "ஜோதிஷமணி" ஆசிரியர், திரு. வி. கே. கிருஷ்ணமாச்சாரியார் அவர்கள் பஞ்சாங்கபடன விளக்கம் செய்தார். செய்கையில் நிகழாண்டில் சுக்கிரன் இராஜாவாகவும், செவ்வாய் மந்திரியாகவும் இருப்பதால் சம பலனுக நிகழும் என்றும், வைகாசி மாதத்தில் ஆறு கிரக சேர்க்கையால் கஷ்டங்கள் ஏற்படக்கூடும் என்றும், "வேயுறுதோளிபங்கன்" என்ற கோளறு பதிக பாராயணத்தாலும், தெய்வ வழிபாட்டாலும், கிரகப் பிரிதியாலும் நன்மை அடையலாம் என்றும் குறிப்பிட்டார். தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்களின் ஆசிச் செய்தியை வித்துவான். ஸ்ரீமத். சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் படித்து ஆதீனச் சார்பில் திரு. க. வச்சிரவேல் முதலியார் அவர்களுக்குப் பொன்னடைப் போர்த்தினர்கள்.

திரு. என். ஆர். முருகவேள் அவர்கள், சமாஜச் சார்பில் திரு. சி. என். சிங்காரவேல் அவர்கள், திரு. நா. முருகேச முதலியார் அவர்கள், திரு. கே. கமலக்கண்ணன் எம். எல். சி., அவர்கள். திரு. ச. சிவகுமாரன் அவர்கள் முதலியோர் திரு. க. வச்சிரவேல் முதலியார் அவர்களின் ஆசிரியர் தகுதியையும், திறமையையும், சித்தாந்தப் புலமையையும் பாராட்டிப் பேசினர்.

திரு. க. வச்சிரவேல் முதலியார் அவர்கள் தருமையாதீனம் தனக்குத் தாயகம் போன்றது என்றும், தன்னை ஆரம்பகாலமுதல் சமயத் துறையிலும், தத்துவத் துறையிலும் ஊக்கியது என்றும், இந்த அருள் நிலயத்தில் பாராட்டுவது தனது சிறந்த பேறு என்றும் கூறி நன்றி தெரிவித்துக்கொண்டார். தலைவர் அவர்கள் புலவரின் அடக்கத்தைப் பாராட்டினார். வித்துவான், ஸ்ரீமத். சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் வரவேற்புரையும், நன்றியுரையும் கூறினார்கள். தருமபுரம் திரு. பி. சுவாமிநாதன் கடவுள் வணக்கமும், வாழ்த்தும் பாடினார்.

## மாதாந்தர சமயப் பிரசார வழிபாடு

சென்னைத் தியாகராயநகரில் உள்ள தருமபுர ஆதீன மடாலய தேவாலய சமயப்பிரசார வழிபாட்டுக்குழுவின் ஆறுவது ஆண்டு நிறைவு விழா 18—4—65 மயிலாப்பூர் ஸ்ரீ வாலீசர் ஆலயத்தில் சென்னைமாநில முன்னாள் சர்வீஸ் கமிஷன் தலைவர், திரு. வி. இரத்தின முதலியார் அவர்கள் தலைமையில் சிறப்பாக நடைபெற்றது. குழுவினர் சார்பில் சுவாமி அம்பாளுக்கு விசேஷ அபிஷேக ஆராதனைகள் நிகழ்த்தப்பெற்றது. தருமபுரம் திரு. பி. சுவாமிநாதன் திருமுறை ஓத அனைவரும் முறையாகக் கூட்டு வழிபாடியற்றினர்.

பிறகு சமயப் பிரசாரக் கூட்டம் நடைபெற்றது. வித்துவான், ஸ்ரீமத். சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் ஆறுண்டுகளாக நிலய வழிபாட்டுக் குழுவினர் உள்ளத்தாலும், செயல் முறையாலும், தொண்டு மனப்பான்மையாலும் உயர்ந்து வந்துள்ளதை விளக்கி, மேலும் உயர வழிபாடு துணைசெய்யும் என்று உரைத்தார்கள். தலைவர் அவர்கள் தமது தலைமையுரையில் இத்தகையக் கூட்டு வழிபாட்டால்தான் மக்கள் ஒற்றுமை வளர முடியும் என்று வலியுறுத்தினார்கள். வழக்கறிஞர் திரு. டி. கே. சுப்பிரமணியப் பிள்ளை அவர்கள் குழுவினரை வரவேற்று ஏழாவது ஆண்டுத் தொடக்கமுதல் குழுவினர் சிறு தொகைக் காணிக்கை செலுத்துவதன் மூலம் எளிய கோயில்கட்கு உதவலாம் என்று யோசனை தெரிவித்தார்கள். அதன்படியே அன்றைய வசூல் மூலம் கற்பூரங்களை வாங்கிக் கொடுக்கக் குழுவினர் இசைந்தனர். திருமதி. மீனாட்சிசுந்தரசிவை அவர்கள் ஐந்தெழுத்து ஓதுவதன் பயன் பற்றி ஆராய்ச்சியுரை நிகழ்த்தினார்கள். அறங்காவலர்கள் வரவேற்று வழிபாட்டைச் சிறப்புற நடத்திக்கொடுத்தனர்.

திருவாமூரில்

# ஸ்ரீ அப்பர் சுவாமிகள் குருபூஜை விழா
# அப்பர் தேவார அருந்தமிழ் மகாநாடு

ஸ்ரீ அப்பர் சுவாமிகள் என வழங்கும் ஸ்ரீ திருநாவுக்கரசு நாயனர் அவதரித்த சிறப்புடையதும், தென்னர்காடு மாவட்டத்தில் பண்ணுருட்டிக்கு அருகில் உள்ளதுமான திருவாமூரில் சமீபத்தில் புதிதாகக் கட்டப்பெற்ற ஸ்ரீ திருநாவுக்கரசு நாயனர் கோயிலில் ஸ்ரீ அப்பர் சுவாமிகள் குருபூஜை விழா 26—4—65 திங்கட்கிழமை வெகு சிறப்பாகக் கொண்டாடப்பெற்றது. அதையொட்டி ஏப்ரல் 24, 25, 26 தேதிகளில் அப்பர் தேவார அருந்தமிழ் மகாநாடு சிறப்பாக நடைபெற்றது. முதல்நாள் கணபதி ஹோமமும், இரண்டாவதுநாள் நவக்கிரக ஹோமமும், மூன்ருவதுநாள் ஸ்ரீ அப்பர் சுவாமிக்கு மகந்நியாச பூர்வமாக ஏகாதச ருத்திராபிஷேகமும் வேதாகம முறைப்படி நடைபெற்றது.

திருப்பாம்புரம் சிவசுப்பிரமணியம் சகோதரர்களின் நாதசுர இசையுடனும், திருக்களர் திரு. சுந்தரேச தேசிகர், அண்ணுமலை நகர் திரு. சுப்பிரமணிய முதலியார் கடவுள் வணக்கப் பாடலுடனும் விழாத் தொடங்கியது. சென்னைமாநில சட்டமன்ற சபாநாயகர் திரு. எஸ். செல்லபாண்டியன் அவர்களும், சமூகநல போர்டு தலைவர் திருமதி. சரோஜினி வரதப்பன் அவர்களும் ஒவ்வொருநாள் பண்ணிசைத் தொடக்கவுரை நிகழ்த்தினர். புதுவைமாநில தலைமை நீதிபதி திரு. எஸ். மகராஜன் அவர்கள் முதல்நாள் மாலை அப்பர் தேவார மகாநாட்டைத் தொடங்கி வைத்தார்கள். சென்னைமாநில செய்தித்துறை அமைச்சர் திரு. ஜி. பூவராகவன் அவர்கள் முதல்நாள் விழாவிற்குத் தலைமை வகித்தார்கள். குருபூஜையன்று காலை புதுவைமாநில முதல் அமைச்சர் திரு. வி. வேங்கடசுப்பா ரெட்டியார் அவர்கள் தலைமையில், திருமுருக. கிருபானந்தவாரியார் அவர்கள் "அருந்துணை" என்பதுபற்றி அரியதொரு விரிவுரையாற்றினர்கள். அன்று மாலையில் தவத்திரு. குன்றக்குடி அடிகளார் அவர்கள் ஆசியுரை கூறினர்கள். முதல்நாள் விழாவில் வித்துவான், ஸ்ரீமத். சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் வாழ்த்துரை கூறினர்கள். தருமபுரம் திரு. பி. சுவாமிநாதன், சீகாழி திரு. எஸ். திருஞானசம்பந்தம், திருக்களர் திரு. சுந்தரேச தேசிகர், அண்ணுமலைநகர் திரு. சுப்பிரமணிய முதலியார், திருக்கடவூர் திரு. சாமிஐயா தேசிகர், வேலூர் திரு. கே. சொக்கலிங்கம்,

சிதம்பரம் திரு. கனகசபைப் பிள்ளை முதலிய சிறந்த ஓதுவா மூர்த்திகளின் தேவார இன்னிசைப் பாராயணத்துடன் அப்பர் சுவாமிகள் திருவீதியுலாக் காட்சி நடைபெற்றது.

மூன்றுநாளும் தில்லைத் திருமுறைக் கழகத்தினர் சிவபூசை செய்து, பன்னிரு திருமுறைப் பாராயணமும் நிகழ்த்தினர். தென்னார்க்காடு மாவட்டக் கலெக்டர் திரு சுப்பையா அவர்கள் முதல்நாள் விழாவில் பங்குகொண்டு சிறப்புரை யாற்றினார்கள். மகாநாட்டில் திரு. ச. சிவகுமாரன், திருமதி. ஆர். இராஜ ரெத்தினம் அம்மையார், பாலூர் திரு. கண்ணப்ப முதலியார், திரு. ஐ. ஏ. சிதம்பரம் பிள்ளை எம். எல். சி., திரு. கே. கமலக் கண்ணன் எம். எல். சி., திரு கீ. இராமலிங்க முதலியார், திரு. பி. ஆர். சுவாமிநாதன், திரு. க. வெள்ளைவாரணம், திருமதி. இராஜேஸ்வரி சுவாமிநாதன் முதலியோர்கள் அப்பர் தேவாரத் தைப் பற்றி அரிய விரிவுரை நிகழ்த்தினர். திரு கொத்தமங்கலம் சுப்பு அவர்கள் "அப்பர் வரலாறு" கதாகாலட்சேபம் நிகழ்த் தினார். சென்னை திரு. கே. சி. சுவாமிநாதன் அவர்கள் "திரு ஞானசம்பந்தர் வரலாறு" வில்லிசைக்கதை நிகழ்த்தினார். இசையரசு திரு. எம். எம். தண்டபாணி தேசிகர் அவர்கள் "பண்ணிசையரங்கு" நிகழ்த்திச் சிறப்பித்தார்.

## அம்பாளுக்கு வெள்ளிக் கவசம்

குருபூஜை விழாவன்று காலை ஸ்ரீ அப்பரால் வழிபடப்பெற்ற ஸ்ரீ பசுபதீசுவர சுவாமி ஆலயத்தில் உள்ள ஸ்ரீ திரிபுரசுந்தரி அம்பாளுக்குத் திருவாமூர் ஸ்ரீ அப்பர் சுவாமிகள் வெள்ளிக் கவசக் கமிட்டியினரால் புதிதாகச் செய்யப்பட்ட வெள்ளிக் கவசம் புதுவைமாநில முதலமைச்சர் அவர்கள் முன்னிலையில் அணிவிக் கப்பட்டது. குருபூஜைவிழாவும், மகாநாடும் திருவாமூர் ஸ்ரீ அப்பர் சுவாமிகள் குருபூஜை விழாக் கழகக் சார்பிலும், ஆலய அறங் காவலர்கள் சார்பிலும், தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குரு மகாசந்நிதானத்தின் அருளாதரவிலும், இந்து சமய அறநிலைய இலாகாவின் ஆதரவிலும், பொதுமக்கள் நன்கொடை உதவியா லும் சிறப்பாக நடைபெற்றது. தருமையாதீனச் சார்பில் வித்துவான், ஸ்ரீமத். சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் முன் னின்று விழாவை நடத்திவைத்தார்கள். ஐயாயிரம் மக்களுக்கு மேல் வந்து வழிபட்டும், மகாநாட்டில் கலந்தும் பயன்பெற்றனர். மூன்றுநாளும் அடியவர்கட்கு மாகேஸ்வரபூசையும், ஏழைகட்கு அன்னம்பாலிப்பும் நடைபெற்றன.

# எதிர்காலம் - திரு. கே. முத்துஜோதிடர்

(விசுவாவசுஞூ வைகாசிமீ 1உ முதல் 32உ முடிய)

(14—5—65 முதல் 14—6—65 முடிய)

**1. மேஷம். அசுவதி - பரணி - கார்த்திகை ¼**

மேஷராசி 9 பாதங்களும் சுபத்தைத்தரும். ஷைமீ 15உக்கு மேல், நன்மைகளும், தீமைகளும் கலந்த பலனைத்தரும்; அலைச்சல் அதிகமாகும்; நெருங்கிய நண்பர்களுக்கும், பந்துக்களுக்கும் கவலையை உண்டுபண்ணும்; தொழில் சம்பந்தமாயும் பல மாறுதல்களை உண்டுபண்ணும். மாதக்கடைசியில் யாவும் சுபமாகும். சனி, புதன் சுபமாகும்.

**2. ரிஷபம். கார்த்திகை ¾ - ரோஹிணி - மிருகசீரிஷம் ½**

விருஷபராசி 9 பாதங்களும், பலவிதமான துன்ப பலன்களைக் கொடுக்கும்; கார்த்திகை, ரோகிணி இவ்விரு நக்ஷத்திரங்களுடைவர்களுக்கு இயற்கைக்கு மாருன துன்ப பலன்கள் அதிகமாகும். மாத ஆரம்ப முதல் இறுவரை ஷை ராசிக்குடையவர்கள் சதா தெய்வ சிந்தனையோடு இருப்பதால் தெய்வபலம் ஏற்படும். வியாழன், வெள்ளி சுபதினங்கள்.

**3. மிதுனம். மிருகசீரிஷம் ½ - திருவாதிரை - புனர்பூசம் ¾**

மிருகசீரிஷம் 3, 4 பாதங்களும், புனர்பூசம் 1, 2, 3 பாதங்களும் அதிக செலவுகளையும், ஆரோக்யக் குறைவையும் உண்டு பண்ணும். எத்தனிக்கும் காரியங்களெல்லாம் தவக்கத்தைக் கொடுக்கும் திருவாதிரை 4 பாதங்களும் நன்மை, தீமைகள் கலந்ததாக இருக்கும். மிதுன ராசிக்குடையவர்கள் தெய்வ பலத்தையே நாடவேண்டும். திங்கள், புதன் சுபமாகும்.

**4. கடகம். புனர்பூசம் ¼ - பூசம் - ஆயில்யம்.**

கடகராசி 9 பாதங்களும், முற்றிலும் சுபத்தைத்தரும். தொழில் ஓங்கும். இலாபத்தோடு கூடிய சஞ்சார பலனையளிக்கும். விவகாரங்களில் வெற்றி, விவாகம் முதலிய சுப சோபனுதிகள், ஏற்பட்டு மனமகிழ்ச்சியைத்தரும். திங்கள், புதன் சுபமாகும்.

5. சிம்மம். மகம் - பூரம் - உத்திரம் $\frac{1}{4}$

சிம்மராசி 9 பாதங்களும் புதிய தொழில்களைக் கொடுத்து, இவை மிகுதியால் மகிழ்ச்சியைக் கொடுக்கும். கிருபைகரமான கிரய, விக்கிரயங்களும் ஸ்தாவர ஜங்கம சொத்துக்களின் சேர்க்கையும் ஏற்படச்செய்யும். ஸ்திர சுகவாசம் உண்டுபண்ணும். ஞாயிறு, செவ்வாய் சுபமாகும்.

6. கன்னி. உத்திரம் $\frac{3}{4}$ - ஹஸ்தம் - சித்திரை $\frac{1}{2}$

கன்யராசி 9 பாதங்களும் தெய்வீக சக்தியால் பிரகாசிக்கும், அசாத்தியமெல்லாம் சுலபசாத்தியமாகும். உலகப் பிரசித்தியைத் தரக்கூடிய காரியங்களெல்லாம் சாதிக்கப்பட்டு எங்கும் நிறைந்த கீர்த்தியை உண்டுபண்ணும். ஆரோக்கியமுண்டாகும். அரசாங்கத்தோடு நெருங்கிய தொடர்போடு கூடிய புகழைத்தரும். கிருஷி. பூமி, கட்டிடங்கள் இவைகளினுல் செலவு அதிகரிக்கும். சனி செவ்வாய் சுபமாகும்.

7. துலாம். சித்திரை $\frac{1}{2}$, - சுவாதி - விசாகம் $\frac{3}{4}$.

சித்திரை 3, 4 பாதங்களும், விசாகம் 2, 3 பாதங்களும் சுபமிராது. வீண் அலைச்சலும், பொருட்செலவும், சரீர பீடையும் உண்டுபண்ணும். மனம் அமைதியின்றி சஞ்சலமடையச்செய்யும். சுவாதி 4 பாதங்களும் விசாகம் முதல் பாதமும் சுபமாகும். தெய்வீகத் தோற்றத்தோடு பிரகாசிக்கச்செய்யும். லோகோபகாரமான யஞ்ஞ யாகாதி கிருத பலன்களைத்தரும். உலகத்தில் தன் மதிப்பை உண்டுபண்ணும். சனி; செவ்வாய் சுபமாகும்.

8. விருச்சிகம். விசாகம் $\frac{1}{4}$ - அனுஷம் - கேட்டை.

விசாகம் 4ம் பாதமும், அநுஷம் 1, 2 பாதங்களும் சுபமிராது. சஞ்சலத்தையும், துக்கத்தையும் கொடுக்கும். அநுஷம் 3, 4 பாதங்களும், கேட்டை 4 பாதங்களும் சுபத்தையேதரும். நஷ்டமான பொருள் திரும்பக் கிடைக்கும். தொழில் ஓங்கும். குடும்பம் தழைக்கும். புதன், வியாழன் சுபமாகும்.

9. தனுசு. மூலம் - பூராடம் - உத்திராடம் $\frac{1}{4}$

9 பாதங்களும், நன்மை தீமைகள் கலந்த பலனுய் நடக்கும். ஆரோக்யக் குறைவு ஏற்படச்செய்யும். எதிர்பாராத வீண் செலவுகளும் சத்துருக்களால் துன்பமும், எத்தனித்த காரியங்கள் நடவாமையும் ஏற்படும், வியாழன்' வெள்ளி சுபமாகும்.

## 10. மகரம். உத்திராடம் ¾ - திருவோணம் - அவிட்டம் ½

மகரராசி 9 பாதங்களும் சுபத்தைத்தரும். தொழில் ஓங்கும். மேலோர் பெரியோர்களின் அன்பு ஏற்படும். ஆரோக்கியம் உண்டுபண்ணும். இல்லற சுகமேற்படும். அடிக்கடி சஞ்சார பலன்களும் ஏற்படும். சனி, ஞாயிறு சுபமாகும்.

## 11. கும்பம் - அவிட்டம் ½. சதயம் - பூரட்டாதி ¾.

அவிட்டம் 3, 4 பாதங்களும், பூரட்டாதி 1, 2, 3 பாதங்களும், சுப சந்தோஷத்தைத் தரும். விவாகாதி சுபங்களும், பந்துமித்திரர்களுடைய சேர்க்கையும், ஆரோக்யமும், இல்லற சுகமும் ஓங்கச்செய்யும். சதயம் 4 பாதங்களும் சுபமிராது. மிகுந்த கவலைகளையும், ஆரோக்யக் குறைவையும் நஷ்டங்களையும் உண்டுபண்ணும். உலகத்தால் அபவாதத்தையும், சகல காரியங்களிலும் தவக்கத்தையும் ஏற்படச்செய்யும். சதா தெய்ய சிந்தனையோடு இருந்துவர சுபமுண்டாகும். வியாழன், வெள்ளி சுபமாகும்.

## 12. மீனம். பூரட்டாதி ¼ உத்திரட்டாதி - ரேவதி.

மீனராசி 9 பாதங்களும், சுபசந்தோஷத்தைத்தரும். கீர்த்தி பத்திரம் கிடைக்கச்செய்யும். எங்கும் பிரசித்தி ஏற்படும். கிரய விக்கிரயங்களில் இலாபமும், ஸ்தாவர ஜங்கம சொத்துக்களின் சேர்க்கையும், மன அமைதியோடு, சந்தோஷத்தை உண்டு பண்ணும். திங்கள், புதன் சுபமாகும்.

குறிப்பு : ஷை மாதத்தில் விருஷபராசியில், கார்த்திகை ரோகிணி நக்ஷத்திரங்களில் அமாவாசையன்று. சூர்யன், சந்திரன், புதன், குரு, சுக்ரன், இராகு, இவர்கள் அக்னி நக்ஷத்திர சம்ஞையுடைய தினத்தில், ஷட்கிரஹ (ஆறு கிரகங்கள்) சேருவதால் முக்கியமாக, கார்த்திகை, ரோகணி, மிருகசீரிஷம், திருவாதிரை. புனர்பூசம், மகம், ஹஸ்தம், சுவாதி, விசாகம், உத்திராடம், சதயம், இந்த நக்ஷத்திரங்களில் ஜனித்தவர்கள் மேற்கண்ட தினத்தன்று நவக்கிரக ஆராதனங்களை அவரவர்களின் சக்திக்கேற்றவாறு செய்துகொண்டும், கன தனவான்களாயுள்ளவர்கள் லக்ஷ, கோடி அர்ச்சனைகளும் ஹோமங்களும் மகாருத்ராபிஷேகங்கள் முதலியனச் செய்துவர தீமைகள் விலகி, சகல பயங்களும் நீங்கி. உலகம் சுபிக்ஷமடையும். சர்வமங்களமும் உண்டாகும்.

## விசுவாவசு - வைகாசி விசேஷ நாட்கள்

12—5—65 முதல் 22—5—65 முடிய திருத்தருமையாதீனம்
ஸ்ரீ ஞானபுரீசுவரர் ஆலயத்தில் உற்சவம்

18—5—65 திருஞானசம்பந்தர் திருநக்ஷத்திரம்

,, முருக நாயனர் திருநக்ஷத்திரம்

,, திருநீலநக்க நாயனர் திருநக்ஷத்திரம்

,, திருநீலகண்டயாழ்ப்பாண நாயனர் திருநக்ஷத்திரம்

21—5—65 தருமபுரம் ஆதி குருஞானசம்பந்தர் குருபூசை

22—5—65 ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்களின்
பட்டணப்பிரவேசம்

29—5—65 கழற்சிங்க நாயனர் திருநக்ஷத்திரம்

30—5—65 வேளூர் மண்டலாபிஷேகக் கிருத்திகை

2—6—65 நம்பியாண்டார்நம்பிகள் திருநக்ஷத்திரம்

3—6—65 நமிநந்தியடிகள் திருநக்ஷத்திரம்

,, சேக்கிழார் நாயனர் திருநக்ஷத்திரம்

4—6—65 சோமாசிமாற நாயனர் திருநக்ஷத்திரம்

7—6—65 24 ஆவது குருமகாசந்நிதானம் அவர்கள் குருபூசை

---


## குமரகுருபரன் — ஆண்டுச் சந்தா 1 — 50

தருமையாதீனத்து முனிபுங்கவரும், ஸ்ரீ காசி மடத்து முதல்வருமான ஸ்ரீலஸ்ரீ குமரகுருபர சுவாமிகளினுடைய திருப்பெயர் பூண்டு, சமயம், இலக்கியம், அறம் முதலிய வற்றை எளிய நடையில் தெளியச்செய்யும் ஆராய்ச்சி விளக்கத்துடன் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி சுவாமிகள் அவர்களது ஆணையின்வண்ணம் உயரிய இவ்விதழ் வெளிவருகிறது.

விலாசம் : நிர்வாக ஆசிரியர், உயர்திருவாளர்.
T. M. குமரகுருபரன் பிள்ளை B. A.. B. L., அவர்கள்,
"குமரகுருபரன்" ஆபீஸ் ஸ்ரீவைகுண்டம்.

# தருமையாதீனம் திருஞானசம்பந்தர் ஆலயம்

## திருநெல்வேலி சந்திப்பு.

ஞாயிறுதோறும் மாலை 6-30 மணி முதல் சொற்பொழிவு

16—5—65 ஸ்ரீ குமரகுருபரர்

— திரு. வ.ச. நடராசபிள்ளை

பண்டார மும்மணிக்கோவை

— திரு. ம. சிவசம்பு

21—5—65 ஸ்ரீ குருஞானசம்பந்தர்

— திரு. வ. ச. நடராசபிள்ளை

தருமையும் தமிழ்த் தொண்டும்

— திரு. ம. சிவசம்பு

23—5—65 நம்பியாண்டார் நம்பி

— திரு. வ. ச. நடராசபிள்ளை

சிதம்பர மும்மணிக்கோவை

— திரு. ம. சிவசம்பு

30—5—65 நமிநந்தியடிகள்

— திரு. வ. ச. நடராசபிள்ளை

கந்தர் கலிவெண்பா

— திரு. ம. சிவசம்பு

6—6—65 சோமாசிமாறர்

— திரு. வ. ச. நடராசபிள்ளை

முத்துக்குமாரசாமி பிள்ளைத்தமிழ்

— திரு. ம. சிவசம்பு

வந்து கேட்டு இன்புறுக !

நெல்லை அருணகிரி
இசைக் கழகம்,

இராம. கனகசபாபதி,
அமைச்சர்.

---


## திரிபுரையின் அருள் அடை

ஒற்றெழுத்தில்லாப்பாட்டு

ஜோதிஷர், K. R. சுப்பிரமணியன்.

மருமலரி னினியகுண முலவுபொழி விலகுநெறி
மாதவம தேபுரியவோ
ரருமைதரு நிழலினெடு மனவொருமை கொளவுரிய
அளிகளிசை செயுமொலியினு
லருணனெழு பரிகடமை விரைவிலவ ணுறுகவெனு
மாணைமொழி யிடுவதான
தருமபுர நகரிலுறை திரிபுரையி னருளடைவை
சரணமவை நினைதிமனமே.

திருத்தருமையாதீனத்திற்குச் சொந்தமான
திருவாரூர் ஸ்ரீ தியாகராஜசுவாமி தேவஸ்தானம்
இராஜன்கட்டளையைச் சேர்ந்த



ரங்கொண்டான் ஸ்ரீ கைலாசநாதர் திருக்கோயில் மகாகும்பாபிஷேகம்

## திருவாமூரில் வைகாசிமாதச் சதய விழா

ஸ்ரீ அப்பர் சுவாமிகள் அவதாரத் தலமாகிய திருவாமூரில் திருக்கோயில் கொண்டுள்ள ஸ்ரீ திருநாவுக்கரசு நாயனாருக்கும், ஸ்ரீ திரிபுரசுந்தரி அம்பாள் சமேத ஸ்ரீ பசுபதீசுவர சுவாமிக்கும் தருமையாதீனத்தின் உபயமாக 24—5—65 திங்கட்கிழமை காலை 10 - மணிக்கு அபிஷேக ஆராதனைகளும், மாலையில் சமயச் சொற்பொழிவுகளும் நிகழும். சென்னை திரு. கே. கமலக்கண்ணன் எம். எல் சி., அவர்கள், திருப்பனந்தாள் திரு. டி. எம். சடையப் பிள்ளை அவர்கள், புதுவை திரு. எஸ். சென்னியப்ப முதலியார் அவர்கள், வித்துவான், ஸ்ரீமத். சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் முதலியோர் கலந்துகொள்வர்.

rinted & Published by K. Sundaresa Iyer, Agent, Dharmapuram Adhinam
at the Gnanasambandam press, Dharmapuram, Mayuram. 10 5-65